விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 19 செவ்வாய்க்கிழமை (02.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## வடக்கு, கிழக்கு அபிவிருத்தி செயலணியில்
# கிளிநொச்சி அபிவிருத்தி பற்றி பேசாதது ஏன்?

### காரசாரமாக விமர்சித்துவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறினார் சிறீதரன் எம்.பி



(கொழும்பு)

வடக்கு கிழக்கு துரித அபிவிருத்தி செயலணிக் கூட்டத்தில் கிளிநொச்சி அபிவிருத்தி பற்றி பேசாதது ஏன்? என காரசாரமாக விமர்சித்து விட்டு அபிவிருத்தி செயலணி கூட்டத்திலிருந்து வெளியேறினார் சிறீதரன் எம்.பி. (23ஆம் பக்கம் பார்க்க)

## வீடு புகுந்து சகோதரிகள்
### மூவர் மீது தாக்குதல் உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வளாகத்துக்குள் புகுந்த பெண் ஒருவரும் அவரது மகனும் அங்கு வசிக்கும் சகோதரிகளான 3 இளம் பெண்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டுத் தப்பித்தனர்.

தாக்குதலுக்குள்ளான இளம் பெண்கள் மூவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுள்ளனர்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் தெற்கு யோகபுரத்தில் நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் ரெம்சிகா (வயது - 23). ரம்யா (வயது-18) மற்றும் யெனுஷா (வயது-16) ஆகிய மூன்று பேருமே தாக்குதலுக்குள்ளாகினர். (ம-3)

## வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிப்போம் - ஜே.வி.பி

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் கொத்மலை பிரதேச சபைக் கூட்டம் பூண்டுலோயாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே, ஜே.வி.பியின் தேசிய அமைப்பாளர் பிமல் ரத்னாயக்க இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் 23☛

## 769 கிலோ கொக்கெய்ன் போதை ஜனாதிபதியின் முன்னிலையில் அழிப்பு



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புத் துறையினால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்ற நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்ட 769 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை பகிரங்கமாக அழிக்கும் நடவடிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கண்காணிப்பின் கீழ் நேற்று 23☛

## சித்திரவதையை தடுப்பதற்கான
### ஐ.நா. உபகுழு இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

சித்திரவதைகளை தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உபகுழு, இலங்கைக்கான தமது முதலாவது விஜயத்தை 23☛

## வடமராட்சி நீர்ப்பாசனத்திட்டத்தை செயற்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் முட்டுக்கட்டை
### தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நீர்ப்பாசன திட்டத்தை செயற்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் முட்டுக்கட்டையாக இருப் பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (விரிவான செய்தி 3ஆம் பக்கம்)

அன்பு வாசகர்களே...



கம்பவாரிதி
இ.ஜெயராஜ்
அவர்களுக்கு
புருசோத்தமன்
எழுதும் கடிதம்
இன்றைய
வலம்புரியில்...
வாசிக்கத் தவறாதீர்கள்...!

## அரச ஊழியர்களுக்கான சம்பள விடயத்தில் அரசு பொய்யுரைக்கின்றது - பந்துல



(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கான சம்பள விடயத்தில் அரசாங்கம் பொய்யுரைக்கின்றது என மகிந்த அணி சாடியுள்ளது. 23☛

## ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நிராகரித்தால்
### மாற்றுத்திட்டம் என்ன? ஐ.நா. கேள்வி

(ஜெனிவா)

ஜெனிவா பிரேரணை பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் நிராகரிக்குமாக இருந்தால், அவற்றுக்கு பதிலாக முன்வைக்கவுள்ள மாற்று பொறிமுறைகள் என்ன என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சட்ட சமத்துவ மற்றும் 23☛

## உஷ்ணமான காலநிலை
### இன்றும் தொடரும்

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் உஷ்ணமான காலநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. 23☛



## வட மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக
### பிரான்ஸ் தூதுவருக்கு ஆளுநர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டு தூதுவர் ERIC LAVERTU ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று பிற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

வடக்கிற்கான தனது முதலாவது விஜயத்தினை மேற்கொண்டுள்ள பிரான்ஸ் தூதுவரை உற்சாகமாக வரவேற்ற ஆளுநர் 23☛

## தலையில் ஏற்பட்ட கட்டியால் இளம் பெண் உயிரிழப்பு
### அடுத்த வாரம் திருமணத்திற்கு ஏற்பாடாகியிருந்த நிலையில் சோகம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தலையில் ஏற்பட்ட கட்டிக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டு கோமா நிலைக்குச் சென்ற இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



சாம் கர்ரான்

# 'வந்தார் வென்றார்'

## கர்ரான் 'ஹட்ரிக்' பஞ்சாப் 'திரில்' வெற்றி

டில்லி அணிக்கு எதிரான பிரிமியர் போட்டியில் பஞ்சாப் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது. வேகத்தில் மிரட்டிய கர்ரான் 'ஹட்ரிக்' சாதனை படைத்து அசத்தினார். மொகாலியில் நடந்த லீக் போட்டியில் அஷ்வினின் பஞ்சாப் அணி, ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான டில்லியை எதிர கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. டில்லி அணியில் அமித் மிஸ்ராவுக்குப் பதில் அவேஷ் கான் வாய்ப்பு பெற்றார். முதுகுப்பகுதி வலியால் அவதிப்படும் கெய்ல், அன் ட்ரூ ரை நீக்கப்பட்டு, பஞ்சாப் அணியில் கர்ரான், முஜீப் அர் ரஹ்மான் சேர்க்கப்பட்டனர்.

**'வேகம்'**

பஞ்சாப் அணிக்கு கர்ரான், லோகேஷ் ராகுல் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் பந்தை 144.8 கி.மீ., வேகத்தில் வீசி மிரட்டினார் ரபாடா. அடுத்து மோரிஸ் ஓவரில் ஒரு சிக்சர், பவுண்டரி என அடித்த லோகேஷ் ராகுல் (15), இதே ஓவரின் 5வது பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுபக்கம் அவேஷ் கான் ஓவரில் மூன்று பவுண்டரிகள் அடித்தார் கர்ரான். சந்தீப் பந்தில் சிக்சர் அடித்த கர்ரான் (20) நீடிக்க வில்லை. பின் சர்பராஸ் கான், மயங்க் அகர்வால் இணைந்தனர். சர்பராஸ் கான் ஒரு பக்கம் பவுண்டரிகளாக விளாசினார்.

**மயங்க் ஏமாற்றம்**

இந்நிலையில் மயங்க் அகர்வால் (6) துரதிர்ஷ்டவச மாக ரன் அவுட்டா னார். ஹர்ஷல் படேல் பந் தில் மில்லர் ஒரு சிக்சர் அடிக்க, பஞ்சாப் அணி 10 ஓவ ரில் 86/3 ஓட்டங் கள் எடுத்தது. தொடர்ந்து ஹர்ஷல் பந்துகளை பவுண்டரிக்கு விரட் டினார் மில்லர்.

இவருக்கு 'கம்பெனி' கொடுத்த சர்பராஸ் கான் (39), ரிஷாப் பன்டிடம் 'பிடி' கொடுத்து கிளம்பினார். மனம் தளராத மில்லர், அவேஷ் கான் மற்றும் ஹர்ஷல் பந்துகளை பவு ண்டரிக்கு விரட்டனார். 30 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்த மில்லர், சிக்சருக்கு ஆசைப் பட்டு, கிறிஸ் மோரிசிடம் சிக்கினார்.

இதன் பின் அணியின் ஓட்டவேகம் அப்படியே குறைந்தது. வில்ஜோயன் (1), அஷ்வின் (3), முருகன் அஷ்வின் (1) வந்த வேகத்தில் திரும்பினர். ஷமி 'டக்' அவுட்டானார்.

பஞ்சாப் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக் களை இழந்து 166 ஓட்டங்கள் எடுத்தது.

**பிரித்வி ஷாக்**

டில்லி அணிக்கு ஆரம்பத்தில் 'ஷாக்' காத்திருந்தது. அஷ்வின் வீசிய முதல் பந்தில் பிரித்வி 'டக்' அவுட்டானார். ஸ்ரேயாஸ் ஐயர் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மீண்டும் மிரட்டிய அஷ்வின் இம்முறை தவானை (30) வெளியேற்றினார். அடுத்து இணைந்த ரிஷாப் பன்ட், இங்ராம் ஜோடி சீரான ஓட்டக் குவிப்பை வெளிப்படுத்தியது.

**திடீர் திருப்பம்**

அஷ்வின் பந்தில் சிக்சர் அடித்த ரிஷாப் (39), ஷமி பந்தில் போல்டானார். பின் கிறிஸ் மோரிஸ் (0), இங்ராம் (38), ஹனுமா விஹாரி (2) என வரிசையாக வீழ்ந்தனர். கர்ரான் வீசிய 18வது ஓவரின் கடைசி பந்தில் ஹர்ஷல் (0) ஆட்டமிழந்தார். தொடர்ந்து மிரட்டிய கர்ரான், தனது அடுத்த ஓவரின் முதல் இரண்டு பந்தில் ரபாடா (0), சந்தீப்பை (0) போல்டாக்கி, 'ஹட்ரிக் 'சாதனை படைத்தார். டில்லி அணி 19.2 ஓவரில் 152 ஓட்டங்களுக்கு சுருண்டது. பஞ்சாப் அணி 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

# மானிப்பாயில் வாள்வெட்டு மூவர் பொலிஸாரால் கைது

மானிப்பாய் மற்றும் நவாலி பகுதிகளில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள வீடு மற்றும் நவாலி அரசடியிலுள்ள வீடு ஆகியவற்றுக்குள் கடந்த சனிக்கிழமை இரவு புகுந்த கும்பல் ஒன்று அடாவடியில் ஈடுபட்டது.

நவாலி அரசடி வீதியிலுள்ள கிருஷ்ணா என்பவருடைய வீட்டுக்குள் புகுந்த கும்பல் தந்தையையும் மகனையும் வெட்டிக் காயப் படுத்தியதுடன் வீட்டிலிருந்த பொருட்களையும் அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பித்தது.

அத்துடன், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையாகவுள்ள வீடொன்றுக்குள் புகுந்த கும்பல் அங்கு யன்னல்கள், கதவுகள் மற்றும் பொருட்களை அடித்துச் சேதப்படுத்தி விட்டுத் தப்பித்தது.

இந்த நிலையில் விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு இளைஞர்களை நேற்றுக் காலை கைது செய்தனர்.

நவாலி அட்டகிரியைச் சேர்ந்த இருவரும் உடுவிலைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்குவிலில் கடந்த பெப்ரவரி மாதம் வீடொன் றுக்குள் புகுந்து வான் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு தீவைத்த கும்பலைச் சேர்ந்தவரின் வீடே மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் தாக்கப்பட்டதாக சந்தேக நபர்கள் தெரிவித்ததாகப் பொலிஸார் கூறினர்.

அத்துடன், நவாலி அரசடியில் தாக்கப்பட்டவர் நீதிமன்றில் சாட்சியமளித்ததாக தாக்கப்பட்டார் எனவும் சந்தேகநபர்கள் கூறியுள்ளனர்.

ஆவா குழுவைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் கூறினர். (ம-3,101)

# ஆலயச் சூழலை குளிர்மைப்படுத்த பவுசர் மூலம் நீர்பாய்ச்சல்

சுழிபுரம் வீரபத்திரர் உடனுறையும் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தின் 8ஆம் பொங்கல் விழா இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறுகின்றது.

ஆலயத்தினுடைய பொங்கல் விழாவுக்கு பக்தர்களுடைய நலன்கருதி வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ந.திரிலோகநாதன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இராணுவத்தினரும் கடற்படையினரும் இணைந்து ஆலய சுற்றுச்சூழலுக்கு இலவசமாக பவுசர் மூலம் தண்ணீர் அடித்து ஆலயசூழலை குளிர்மைப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

**வாடகைக்கு**

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் யாழ்.நகர்ப்பகுதிக்கு அண்மையிலும் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (8319)
076 214 4170
077 491 2596

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தம் செய்யப்பட்டது

1 Kg 480/= மட்டும்

U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

TP:- 077 868 9500 (8324)

# யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக

## சமிந்த ஸ்ரீ ராஜித கடமைகளை பொறுப்பேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக சமிந்த ஸ்ரீ ராஜித தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வையொட்டி யாழ்.பொலிஸ் தலைமையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பொலிஸ் அணிவகுப்பு மரியாதையிலும் கலந்து கொண்டார். (ம-10)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தாய்லாந்தின் தலைநகரமான Bangkokல் (Berkeley Hotel Pratunam) இன்று 02.04.2019 நடைபெறும் **யூனியன் அஷ்யூரன்ஸ்** நிறுவனத்தின் 2018ம் ஆண்டுக்கான வருடாந்த விருது வழங்கும் விழாவில் Platinum, MDRT எனும் சர்வதேச உயரிய விருதுகளையும் (Vietnam) வெளிநாட்டு சுற்றுப் பயணத்தையும் வென்று யூனியன் அஷ்யூரன்ஸ் பருத்தித்துறை பிராந்தியத்தின் நெல்லியடி கிளைக்கு பெருமை சேர்த்து தந்த **R.சரண்யா** (Senior Personal Financial Advisor) அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

***Miss Rasanayaham Saranya***

*(BA Hons. Economics Special Degree)*

***MDRT - 2016, 2017, 2018***

***Platinum 2018, Foreign Tour vietnam***

வாழ்த்துவோர் — Best Wishes

**உத்தியோகத்தர்கள்**
**யூனியன் அஷ்யூரன்ஸ்**
**பருத்தித்துறை பிராந்தியம்**

union assurance — Trust in your tomorrow, today.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்நாட்டு நீதித்துறையில் நம்பிக்கை கொள்ள வேண்டும்"

# கலப்பு நீதிமன்ற விசாரணை அரசியலமைப்புக்கு முரண்!

## அமைச்சர் ஹக்கீம் நிராகரிப்பு

(ருவன்வெல்ல)

**வெளிநாட்டு நீதிபதிகளைக்கொண்டு கலப்பு நீதிமன்றம் ஊடாக இலங்கை விவகாரத்தை கையாள்வது அரசியலமைப்புக்கு முரணானது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். அத்தோடு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் யுத்த காலத்தில் நடந்த தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதில் அனைவரும் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.**

ருவன்வெல்ல, வெந்தல விஸ்தரிக்கப்பட்ட குடிநீர் இணைப்பை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்ததன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் மாநாடு அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்றபோது, அங்கு பேசப்பட்ட விடயங்களுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, கடந்த காலங்களில் அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீறாத வகையில் செயற்படுவதற்கான பொருத்தத்தை வழங்கியிருக்கிறார்.



இன நல்லிணக்கத்துக்காக உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை செயற்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் நாட்டின் அரசியலமைப்புக்கு அமைவாக, குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

நாட்டின் நீதித்துறையில் நம்பிக்கையிழந்து, வெளிநாட்டு நீதிபதிகளை கொண்டுவந்து இந்த விடயத்தை கையாள்வது அரசியலமைப்புக்கு முரணானது என்பதை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தெளிவாக சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

எனவே, சர்வதேச நீதிமன்றம் அல்லது கலப்பு நீதிமன்றத்தை விட, உள்நாட்டு பொறிமுறை மூலமே இதற்கு தீர்வு காணப்பட வேண்டும்" என்றும் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## வேதன விவகாரத்தில் அரசு பொய் உரைப்பு

### பந்துல மறுப்பு

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கான ஒதுக்கங்கள் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அரசாங்கப் பணியாளர்களுக்கான வேதனம் வழங்க முடியாமல் போனதாகக் கூறப்பட்டமை உண்மைக்குப் புறம்பானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெறும் குழுநிலை விவாதத்தில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் குறித்த அமைச்சுக்கான பாதீட்டு ஒதுக்கம் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டது.


கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தையும் மீறி, எதிர்க்கட்சி இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதன் மூலம் இந்த மாதத்துக்கான அரச பணியாளர்களின் கொடுப்பனவை வழங்க முடியாமல் போய் இருப்பதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

எனினும் இதனை நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மறுத்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான இடைக்கால பாதீட்டில் அமைச்சுக்களுக்கான ஒதுக்கங்கள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அரச பணியாளர்களுக்கான வேதன வழங்கலில் சிக்கல் இருக்காது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## வடமராட்சி நீர்ப்பாசனத்திட்டத்தை செயற்படுத்த வனஜீவராசிகள் திணைக்களம் முட்டுக்கட்டை

### தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்




வடமராட்சி நீர்ப்பாசனத் திட்டத்தைச் செயற்படுத்துவதில் வனஜீவராசிகள் திணைக்களம் முட்டுக்கட்டையாக உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2000 மில்லியன் ரூபா செலவில் யாழ்.மாவட்டத்திற்கு குடி நீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் வடமராட்சி நீரேந்துப் பிரதேசத்தை இணைத்து சாவகச்சேரி பருத்தித்துறை வீதியிலுள்ள அந்தணத்திடல் பகுதியில் 6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பாரிய நீர்ப்பாசனக் குளம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் விதமாக வனஜீவராசிகள் திணைக்களத்தால் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி 1956/13 இலக்க அரச வர்த்தமானிமூலம் அப்போதையதுறைசார் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவால் குறித்த பகுதி இயற்கை ஒதுக்கிடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

வனஜீவராசிகள் அமைச்சால் வெளியிடப்பட்ட படத்தின் B 75 சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் ஆரம்பிக்கும் வடமராட்சி நீரேந்துப் பகுதியில் ஆரம்பித்து AB 31 கொடிகாமம் பருத்தித்துறை பகுதி மற்றும் B 71 நாகர்கோவில் பகுதியில் இருந்து ஆழியவளை வரை நீரேந்துப் பிரதேசமும் நிலப்பகுதியான நாகர்கோவிலும் உள்ளடங்கலாக 7882 ஹெக்டேயர் பகுதி கையகப்படுத்தப்பட்டது.

இந் நிலையில் மாற்றுக் குடிநீர்த்திட்டமான வடமராட்சி நீரேரித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சுற்றுச் சூழல் அனுமதி பெறுவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

"மங்குரோஸ்" தாவரத்தைப் பாதுகாக்க வேண்டும் எனக்கூறும் வனவளத் திணைக்களம் இப்பகுதியில் அழிவடைந்து வரும் நிலையில் குறித்த தாவரம் காணப்படுவதால் நீர்ப்பாசனத்திட்டத்துக்கு அனுமதி தரமறுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்ட மக்களின் குடிநீருக்கான கனவைப் போக்கும் திட்டமாக வடமராட்சி நீரேரித் திட்டம் அமைந்த போதும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் செயற்பாட்டால் இத்திட்டம் கைநழுவிப் போகக் கூடிய அபாயம் உள்ளது.

எனவே யாழ்.மாவட்ட மக்களின் அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்யும் இத் திட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு தமிழ் அரசியல்வாதிகள் இதய சுத்தியுடன் அரச உயர்மட்டத்திற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10)

## மாகாணத் தேர்தல் குறித்து நீதிமன்றத் தீர்ப்பு தேவை

### தேசப்பிரிய எதிர்பார்ப்பு



(மொரட்டுவ)


மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பான சட்ட திட்டங்கள் தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பொன்றை எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ, எகொடஉயன பகுதியில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலை அவசரமாக நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணையகம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அதற்காக நீதிமன்றத்தின் வழிகாட்டல் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமிதம் கொள்கிறோம்







தேசிய உற்பத்தி திறன் போட்டியில் முதலாம் இடம்பெற்று **கிளிநொச்சி மாவட்டச்செயலகம்** இலங்கையின் 25 மாவட்டச் செயலகங்களிலும் முதலாவதாக **தலைநிமிர்ந்து** நிற்கின்றது.

26.03.2019 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவில் கிளிநொச்சி மாவட்டச்செயலகம் 2747 திணைக்களங்களோடு போட்டியிட்டு முதலாம் இடத்திற்கான விருதினைப் பெற்று வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இவ்வரலாற்றுச்சாதனையை நிலைநாட்டி சாதனை நாயகனாக திகழும் கிளிநொச்சி மாவட்டத்தின் அரசாங்க அதிபர் **உயர்திரு. சுந்தரம் அருமைநாயகம்** அவர்களையும் அவரோடு உடன்நின்ற பணியாளர் குழாத்தையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறோம்

**பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்,**
**பிரதேச செயலகம், கரைச்சி, கிளிநொச்சி.**

(C-5960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:மகம் 2சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L,சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு:உள்நாடு<br>தொ.இ: B/9501 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 1<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:HND IT, Software Developer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/9504 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L,விவசாயம்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9502 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:அனுசம்<br>கி.பா: 22செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரசதொழில், வெளிநாடு<br>தொ.இ: G/9509 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்:பூரம் 2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பல்கலைக்கழகம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/9503 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம் 3செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (மனைவியை இழந்தவர்களும் ஏற்கப்படும்)<br>தொ.இ: G/9513 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 39<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L, London<br>எதிர்பார்ப்பு: London PR<br>தொ.இ: B/9505 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 3<br>கி.பா: 11 ½ உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Scபட்டதாரி<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Lecturer (உள்நாடு)<br>தொ.இ: G/9516 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# மணிவிழா வாழ்த்து



பொருளியலாளர் உயர்திரு.

## வே.கருணாகரன்

(B.A. Hons Dip in Edu) அவர்கள்

வைரவிழா

Best Wishes

நட்சத்திரம்:- 2019.04.02

நாள்:- 2019.04.04

மூளாயூர் ஆசிரியர் வேலாயுதம்– மனோன்மணி தம்பதியினர் ஈன்றெடுத்த ஏக புதல்வனே!

**கருணாகரன்** அவர்கள்

மூளாய் சைவப்பிரகாசா, சுழிபுரம் விக்ரோறியா தனிற் கல்வி பயின்று துடுப்பாட்டம், உதைபந்தாட்டத் தலைவரானார் யாழ். பல்கலையிற் பொருளியற் சிறப்புப் பட்டத்தையும் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்று ஆசிரியரானார் மூளாய் இந்து இளைஞர் மன்றக் கட்டடத்தை மூவேழு நாளிற் கட்டி முடித்து உன்னத தலைவரானார் யாழ். நாவலர் வீதி அதிபர் பொன்னம்பலம் ஆசிரியை இராசம்மா தம்பதியினரின் தவப்புதல்வி விஞ்ஞான ஆசிரியை சயந்தியைத் திருமணம் புரிந்தார் **அனிதா** (பொறியியலாளர்), **கோபிகாந்** (புகுமுக மாணவன், மொரட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரைப் பிள்ளைகளாகப் கொண்டார். பேருவளை பாலிஹா மகா வித்தியாலயம், யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றி அகவை ஐபதினொன்றில் ஓய்வுபெற்றார். பொருளியல் நூல்கள் எழுதுவதிலும் சுவாமி ஸ்ரீ சத்தியசாயி பகவான் சேவையிலும் ஈடுபட்டு வருகின்றார்.

**இன்று மணிவிழாக் காணும் அன்புச் சோதரனே! என்றும் சீருடனுஞ் சிறப்புடனும் இனிதே மங்களமாய் வாழிய! வாழியவே!!**

அன்புடன் பாசமிகு சோதரிகள்
திருமதி.இராசரத்தினம் மனோராணி (தொல்புரம்)
திருமதி.குமரகுருநாதன் மதனராணி (மூளாய்)
திருமதி.தர்மேசன் ஆனந்தராணி (மூளாய்)
திருமதி.நந்தகுமார் சிவராணி (யாழ். ஐயனார் கோவிலடி)

(6310)


# SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை



E Green Lanka

MICRO PC SYSTEMS

Micro Power Co Systems

WARRANTY 25 YEARS WARRANTY

| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 15kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 1,695,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 1795 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

மின்சார தடை இல்லை
No Power-Cut




விவசாயிகளுக்கான மின்சாரம்




SOLAR STREET GARDEN LIGHTS




7 வருடங்களுக்கான தவணை கட்டண முறை

44 kW — CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW — CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW — CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

12 kW — CEB இனால் வருமானம் ரூ. 32,230 (1465 x 22/-) ரூ. 14.8 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 23, 067/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 9,163/-

* நிபந்தனைகளுக்குட்பட்டது

KACO Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

LECO Approved

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062 / 077 3963278
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 0356072 / 077 3963281

TIPS!!!
*Factors affecting performance of a solar PV system!*
Factors which are under the control of Human efforts:
1. Solar Panels: Figures given in the datasheet by the panel manufacture and its accuracy of Peak power, Module efficiency, temperature co efficient.=> So request for Tier 1 brand
2. Installation: Panel's orientation and tilt, System Design, Grid quality =>Select well-trained / Certified Company for the Installation.
3. Inverter: Efficiency =>so select premium brands.

*Factors which are beyond the control of Human efforts:*
1. Solar irradiance (SI) available at the site
2. Ambient temperature 3. Accumulation of Dirt/Smog
4. wind speed etc.

மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபயம் மருத்துவ சேவை நிலையம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

அபயம் மருத்துவ சேவை நிலையம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் லண்டன் வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபனால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். ஆனைக்கோட்டை கூழாவடியில் அமைந்துள்ள இம் மருத்துவ சேவை நிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் வைத்திய நிபுணர்களால் இலவச ஆலோசனை யும் வழிகாட்டலும்வழங்கப்படவுள்ளன.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் க.பார்த்தீபன், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-10-272)

## மஹோற்சவம்

கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் திருவருள்மிகு ஸ்ரீ வாராஸ்ரீ அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து நாட்கள் நடைபெறும். பதினொராம் நாளான 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.(5)

## உரிமை கோரவும்

### மோட்டார் சைக்கிள்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாது காணப்படும் (NP MW 3762) இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் 02 மாதங்களுக்குப்பின் அரசுடைமை ஆக்கப்படும் எனவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.(5)

## பசுமாடு ஒன்று

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் 2019.02.01 முதல் உரிமைகோரப்படாது காணப்படும் சிறிய பசுமாட்டினை அதன் உரிமையாளர் யாராவது இருப்பின் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் 02 மாதங்களுக்குப் பின் அரசுடமை ஆக்கப்படும் எனவும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை 3ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும். இவ்வுற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி 10.30 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் 108 சங்காபிஷேகமும் 10.30 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (5)

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான பரிவாரத் திருக்கோவில்களில் ஒன்றான முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறும். இதில் இறுதி நாளான எதிர்வரும் 15 ஆம் திகதி சங்காபிஷேகமும் இடம்பெறும். (5)

## வரட்சி காரணமாக

# ஏழாலைப் பகுதி கிணறுகளில் ஒயில் தாக்கம் அதிகரிப்பு

ஏழாலை ஏழு கோயில் பகுதியிலுள்ள கிணறுகளில் எண்ணெய் படிமம் (ஒயில்) தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் வலி. தெற்குப் பிரதேசத்தில் எண்ணெய்க் கசிவின் தாக்கம் குறைவடைந்து காணப்பட்ட நிலையில் தற்போது யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான கால நிலையால் எண்ணெய் படிமங்களின் கசிவு அதிகரித்துக் காணப்படுகிறது.

யாழ்.குடாநாட்டின் நான்கு பிரதான நன்னீர்ப்படுக்கையில் சுன்னாகம் நன்னீர்ப்படுக்கையே பெரிதாக அமையப் பெற்றது. இப்பகுதிகளிலிருந்து யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கடந்த 10 வருடங்களுக்கு முன் நீர் விநியோகம் செய்யப்பட்டது. இவ்வாறிருக்க தற்போது குறித்த பகுதி மக்களோ விலங்குகளோ அருந்த முடியாதளவிற்கு நீர் மாசடைந்து விட்டதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மக்கள் உயிர் வாழ அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீரைப் பெறுவதில் குறித்த பகுதி மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கியுள்ளனர். எனவே குறித்த பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவை அதிகரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (5-10)

# புவி தினத்தன்று சாவகச்சேரியில் புதிய விழிப்புணர்வு நடைமுறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினரும் கோர் நிறுவனத்தினரும் இணைந்து 2020இல் பொலித்தீன் அற்ற நகரை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் எதிர்வரும் 22ஆம் திகதி உலக புவி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் தொடர்பாக வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மே முதலாம் திகதியிலிருந்து சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அரச மற்றும் தனியார் திணைக்களங்கள்,வர்த்தக நிலையங்களின் கழிவுப் பொருட்களை உக்கும், உக்காத கழிவுப் பொருட்களாக தரம் பிரித்து கொடுத்தால் மாத்திரமே நகரசபை பெற்றுக் கொள்ளும் எனவும், தரம் பிரிக்கப் படாத கழிவுகளை நகரசபையினர் அகற்ற மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

தற்போது சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில்உக்கும், உக்காத கழிவுகளாக தரம் பிரித்தே பெற்றுக் கொள்வதாகவும், உண்வகங்களில் இச் செயற்பாடு வெற்றியளித்திருப்பதாகவும் நகர சபையினர் தெரிவித்துள்ளனர். சாவகச்சேரி நகரசபையினரும் கோர் நிறுவனமும் இணைந்து கடந்த 3 மாத காலத்திற்குள் நகரசபை எல்லைக்குட்பட்ட 37 இடங்களில்பிளாஸ்டிக்பொலித்தீன் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியுள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் தற்போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனை முற்றாக கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சாவகச்சேரியில் அமைந்துள்ள உணவகங்கள் சிலவும் லஞ்சீற் பாவனையை நிறுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை நிறுத்தும் அதேவேளையில் அதற்கு மாற்றீடான பொருட்களை அறிமுகப்படுத்தும் முயற்சியிலும் நகரசபையினர் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினரை அழைத்து பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த தம்மோடு கைகோர்க்குமாறு நகர சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-30)

# 37வது ஆண்டு நிறைவுவிழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 37 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (5-272)




தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதிய அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் யாழ்.பெருமாள் கோயில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். இவ் வைபவத்தில் பாடசாலை மாணவர்கள் 22 பேருக்கு துவிச்சக்கர வண்டியும் 22 பயனாளிகளுக்கு கோ தானமும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கருணாவை கைது செய்யாதது ஏன்?

## நாடாளுமன்றில் சாள்ஸ் கேள்வி

(கொழும்பு) —

**தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினராக இருந்த கருணா அம்மான் எனப்படுகின்ற விநாயகமூர்த்தி முரளி தரனை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்யவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.**



இந்த வருடத்திற்கான வரவு-செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதம் நேற்று நாடாளு மன்றத்தில் இடம்பெற்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மிக முக்கியமாக இலங்கையில் யுத்தம் ஏற்பட்ட காலத்தில் நடைமுறையில் இருந்த பயங்கரவாத தடைச்சட்டம் யுத்தம் முடிந்து 10 வருடங்களாகியும் இன்று வரை நடைமுறையில் இருக்கின்றது.

அந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் அதாவது சாட்சிகள் இல்லாமல் ஒருவரை கைது செய்ய முடியும்.

கைது செய்கின்ற நபர் அவரை துன்புறுத்தி அந்த துன்புறுத்தலின் மூலம் அவர் தான் குற்றங்களை செய்ததாக் ஒப்புக்கொண்டால் அவர்களுக்கு நீண்ட கால தண்டனை வழங்குவதற்கு விசாரணையற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு குற்றத் தடுப்பு பிரிவுக்கு ஜனாதிபதியால் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

அந்தச் சட்டத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மறைமுகமாக உதவி செய்ததன் அடிப்படையில் 100 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அரசியல் கைதிகளாக 10 வருடங்களுக்கு மேலாக இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் சிறு சிறு குற்றங்கள் செய்ததாக தெரிவித்திருக்கின்றனர். இவர்கள் அரசியல் ரீதியான கைதிகள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினராக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரனை அதாவது கருணா அம்மான் என்று கூறுகின்ற அந்த நபரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாங்கள் ஏன் கைது செய்ய வில்லை? விசாரணை செய்ய வில்லை? என்பதை அமைச்சர் இந்த சபைக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்த முடியுமா? என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோன்று கே.பி மற்றும் பிள்ளையான் ஆகியோர் கைது செய்யப்படவில்லை அல்லது விசாரணைக்கு உட்படுத்தப் படவில்லை என்பது குறித்து அமைச்சர் இந்த சபைக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் தெளிவு படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் கோரியுள்ளார்.(இ-7)


10 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர். கிருஸ்ணராஜா கிருஸ்ணரூபன்
மலர்வு: 12.10.1980
உதிர்வு: 02.04.2009

அமரர். கிருஸ்ணராஜா மயூரதன்
மலர்வு: 15.04.1987
உதிர்வு: 21.04.2009

பாசத்தின் உறைவிடமே பண்பின் சிகரமே
எங்கள் மகன்மாரே உங்களை
தொட்டிலிலும் வட்டிலிலும் தார் மேலும்
தோல் மேலும் உங்களை வளர்த்தெடுத்த
தாய்,தந்தை, சகோதரிகள், உறவினர்கள்
கலங்கி நிற்கின்றோம்
பத்து ஆண்டுகள் ஆனாலும் உங்கள்
நினைவுகளுடன் காலமெல்லாம்
கண்ணீர்தான் எம் உள்ளமதில்

உடையார்கட்டு வடக்கு. (8212) தகவல்: குடும்பத்தினர்

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்



நாட்கள் பல சென்றாலும் உம் நினைவு
அகலவே இல்லையம்மா...
வாழ்ந்த நாட்களில் எங்களை எல்லாம்
வாஞ்சையுடன் ஆதரித்தீர்
தகைமை கல்விதனை
கணிசமாக கற்பித்து தந்தீர்...
முழுமையாய் ஒளி தந்த எம் குடும்ப
விளக்கே நீ அம்மா
என்று நீவருவாய்அம்மா
எங்கள்முகம்காண்பதற்கு
உன் நினைவால் இன்று
உன் முகம் காணாமல் ஏங்கித் தவிக்கிறோம்
நினைத்ததெல்லாம் பெற்றுத்தந்து
எம்மோடு மகிழ்வாய்
வண்ணை மண்ணில் வளமாக வாழ்ந்த அம்மா...

பிள்ளைகள், மருமக்கள், (C-5953)
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


## இராசி பலன்

**02.04.2019**

பங்குனி 19 செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சதயம் பின்னிரவு 1.48 மணிவரை
சுபநேரம் 10.41-12.11 மணிவரை
இராகுகாலம் 3.11-4.41 மணிவரை
துவாதசி முற்பகல் 10.01 மணிவரை

கிரகநிலை: சூரி | செவ் | ராகு | சுக், புத | சந் | சனி, கேது, குரு

வளவன்

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் வகையில் தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**கன்னி:** செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், ப்கைவர்கள் விலகுவர்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபா வசமுண்டு.

**விருச்சிகம்:** சுப செய்திகள் வந்து சேரலாம், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்:** நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்:** உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம்.

**மீனம்:** தூர தேசத்திலிருந்து வரும் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கத்தின் மணிவிழா கடந்த வெள்ளிக்கிழமை மணிவிழா சபைத் தலைவரும் சிரேஷ்ட ஆலோசனைச் சபை உறுப்பினருமான வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. (படங்கள்:-சக்தி)

### இரவுவேளை விற்பனைக்குத் தயாராக இருந்த

# 13 கிலோ கேரளக் கஞ்சாவுடன் அச்சுவேலியில் மூவர் கைது!

### ஆட்டோ ஒன்றும் 2 மோட்டார் சைக்கிள்களும் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் இரவு நேரத்தில் விற்பனைக்குத் தயாராக இருந்த 13 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் மூவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்று முன்தினம் 10 மணியளவில் கைது செய்யப் பட்டனர்.

இரவு நேரங்களில் கஞ்சா விற்பனையில் ஈடுபடும் குழு தொடர்பில் யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இம் முற்றுகை இடம்பெற்றது.

இவர்களிடமிருந்து 30 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் ஒரு ஆட்டோவையும் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இப் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர்கள் பருத்தித்துறை,இன்பசிட்டி,வல்வெட்டித்துறை, ஆதிகோயில் மற்றும் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

## தார் வீதியாக மாற்றம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் இரண்டாம் வட்டாரத்திலுள்ள கோண்டாவில் கொட்டைக்காடு நான்காம் குறுக்கு வீதி தார் வீதியாக மாற்றம் காணும் தறுவாயில் பிரதேச மக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட ஆரம்ப நிகழ்வில், வட்டார உறுப்பினர் கு.மதுசுதன்,மீள்குடியேற்ற அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# எரிபொருள் போத்தலுடன் மிரட்டும் பருத்தித்துறை மரக்கறி வியாபாரிகள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மேல் மாடி மரக்கறிச் சந்தையில் வியாபாரம் செய்யமாட்டோம்.மீறி எம்மை அகற்ற நினைத்தால் அசம்பாவிதங்களை எதிர்நோக்க வேண்டிவரும் என நகரசபையை மிரட்டும் வகையில் வியாபாரிகள் செயற்பட்டனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

பருத்தித்துறை மரக்கறி சந்தைப் பிரிவு மாடியில் இயங்குவதாகவும் சிலர் கீழுள்ள மீன் சந்தைப் பகுதியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுவதால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து கடந்த 29 ஆம் திகதி வியாபாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், போராட்டக்காரர்கள் தமக்கான நிதியைப் பெற்றுத்தருமாறு வட மாகாண ஆளுநரை அணுகிய போது, வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளரை இச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநர் பணித்திருந்தார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற உதவி ஆணையாளர் உள்ளூராட்சி சட்டத்திட்டங்களின் படி பொதுச்சந்தை இருக்கும் இடத்திலிருந்து 500 மீற்றர் வட்டத்தில் மரக்கறி வியாபாரம் செய்ய முடியாதெனவும் எல்லோரும் மேல் மாடியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுமாறு அறிவுறுத்தியிருந்தார்.

எனினும் ஒரு சில வியாபாரிகள் அதிகாரிகளினதும் நகரசபை உறுப்பினர்களினதும் உத்தரவைப் பின்பற்றாமல் தொடர்ந்து மீன் சந்தைப் பகுதியில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர் அருகில் எரிபொருள் போத்தல்களுடன். (இ-10)

# சாவகச்சேரி நகரசபைக்கு புதிய செயலாளர் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைக்கு கடந்த 25 ஆம் திகதி புதிய செயலாளராக ஜீவரட்ணம் சபேசன் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். சாவகச்சேரி நகரசபையில் நீண்ட காலமாக செயலாளராக கடமையாற்றிய கா.சண்முகதாசன் வேலணைப் பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதனையடுத்து கரைதுறைப்பற்று பிரதேச சபையில் செயலாளராகக் கடமையாற்றிய சபேசன் சாவகச்சேரி நகரசபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-30)

## சமாதான நீதவான்களாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபை உறுப்பினர்கள் 20 பேரில் 18 பேர் சமாதான நீதவான்களாக அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். இதில் ஐவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10-272)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணவாய் தெற்கு விபுலானந்தர் முன்பள்ளியில் நேற்று இடம்பெற்ற சிறுவர் சந்தையின் போது... (படங்கள்:-மகாலிங்கம்)

# தேங்காய் விழுந்து குழந்தை உயிரிழப்பு

## ஜே.சி.பி.சாரதி கைது

(பிஹில்லவத்த)

மஹவெல- பிஹில்லவத்த- வடக்கு மாத்தளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி இரண்டு வயதுக்குழந்தையொன்று உயிரிழுந்துள்ளது.

குறித்த பகுதியில் ஜே.சி.பி. இயந்திர வாகனத்தின் மூலம் மணல் அகற்றல் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அருகிலிருந்த தென்னை மரம் பாதிப்புக்குள்ளானதில் தேங்காய்க் குலையொன்று அதனருகில் அமைந்திருந்த வீட்டின் கூரை மீது விழுந்தமையால் வீட்டினுள்ளேயிருந்த இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஜே.சி.பி.வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# குவைத்தில் இடர்களை எதிர்நோக்கிய 57 பேர் இலங்கைக்கு நேற்றுத் திரும்பினர்



(கொழும்பு)

தொழில் நிமித்தம் குவைத்துக் குச் சென்று, அங்கு பல்வேறு இன்னல்கள் மற்றும் துன்புறுத்தல்களுக்கு ஆளான, இலங் கைப் பணியாளர்கள் 57 பேர், அந்நாட்டிலிருந்து, நேற்று காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்களில், 9 ஆண்களும், 48 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள், இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குவைத்திலுள்ள, இலங்கைத் தூதரகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களே, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் இவ்வாறு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் தத்தமது வீடுகளுக்குச் செல்வதற்கான கொடுப்பனவுகளை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# திமுத்திற்கு தற்காலிக தடை



(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவை இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் சாலிய சன்ன அபேரத்ன உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை திமுத்தின் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் நுகேகொட வைத்திய நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்டு வைத்திய அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் திமுத் கருணாரத்ன கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனாதிபதி இறுதி அஞ்சலி



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் அமரர் காமினி திஸாநாயக்கவின் பாரியார் காலஞ்சென்ற சிறிமா திஸா நாயக்கவின் உடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் இறுதி அஞ்சலி செலுத்தினார். கொழும்பு, விஜேராம மாவத்தையில் அமைந் துள்ள அன்னாரது இல்லத்திற்கு சென்ற ஜனாதிபதி, இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க, வருனி திசாநாயக்க உள்ளிட்ட குடும்ப உறவினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார். (இ-7)

## உணவு பாதுகாப்பு வாரம் ஆரம்பம்

# பாதுகாப்பான உணவுகளை கொள்வனவு செய்வோம்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான உணவு பாதுகாப்பு வாரம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி நேற்றுத் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை உணவு பாதுகாப்பு வாரம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

பாதுகாப்பான உணவுகளை மாத்திரம் கொள்வனவு செய்வோம் என்ற தொனிப்பொருளில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அல்லாத உணவுகளை கொள்வனவு செய்வதை நிராகரித்து அந்த நிறுவனம் தொடர்பாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிப்பது குறித்து பொது மக்களை அறிவுறுத்தும் முகமாகவே இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# குறை'களை' பதிகம் 35

## காதோரம் செல்லிடத் தொலைபேசி சொருகி...



காதோரம் செல்லிடத் தொலைபேசி சொருகி;
வீதியிலே பயணிக்கும் அதிசிறந்த
சாரதிகள் பாரும்; பலரக வாகனங்கள்;
ஊர் தோறும் ஒரே விதம், அற்புதம்
தெருவோரம் செல்வோர்கள் பார்க்கையிலே,
பெருமிதம் இவர்களுக்கொரு கையாலே;
வளையத்தைத் திருப்புகின்ற அனுபவம்
இதுபோன்ற சாதனையை எவரேனும் செய்வாரோ?

தலைக்கவசம் பலமளிக்கும் எனக்கருதி;
வலக்கரம் பற்றிக் கைபிடித்து
இடக்கரத்தால் கைபேசி சரிசெய்து
மடி மீது கைவைத்துச் சைகை செய்து;
பலபேசிப் பலரின் உயிருக்கு உலைவைக்கும்;
அவலம், அதிகம் நிகழும் தெருவில்;
யாவரும் நாமமன்று மனதார எண்ணும் ஆர்வலர்கள்
பொறுப்புடன் பெருக வேண்டும்

தனியொருவர் தெருவிலே மெதுவாக நகர்கிறார்
பெருங்குரலில் பேசுகின்றார் ஆணவத்தில் அலட்டுகிறார்
ஆபாச வார்த்தைகளால் கண்டபடி திட்டுகிறார்
யாருக்கும் பைத்தியமோ பிடித்ததுவோ!
பயந்தபடி திரும்பியதும் ஒரேயொருவர்
உந்துருளியில் விலகியவர் கடந்த போது
உற்றுப்பார்த்தேன் பின்புறமாய் ஒருவர்
காதோரம் செல்லிடத் தொலைபேசி சொருகி...

கு.குகன்
முள்ளியவளை

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி
கண்டி. அம்பத்தன்ன 077 939 5222
Viber 076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச் செய்கை நிலங்களை அபகரித்த வனவளத்திணைக்களம் தொழில் வாய்ப்பின்றி அல்லலுறும் மருதமடு கிராம மக்கள்

## வறுமை நீக்க வழி செய்யுமாறு மக்கள் பிரதிநிதிகளிடம் கோரிக்கை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட மருதமடுக்கிராமத்தில் வசிக்கும் மக்கள் தொழில் வாய்ப்புக்களின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மேற்குப்பகுதியில் அமைந்துள்ள மேற்படி கிராமத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட குடும்பங்கள், முதியவர்கள் என நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

(கண்டாவளை)

இதில் 80 வீதமான குடும்பங்கள் எந்தவிதமான தொழில் வாய்ப்புக்களுமின்றி அன்றாட உணவிற்கே அல்லலுறும் நிலை காணப்படுவதாகக் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப்பகுதியிலேயே மக்கள் விவசாயம் செய்து வாழக்கூடிய நிலங்கள் இன்றும் வனவளத் திணைக்கத்தினால் வனப்பகுதிகளாக எல்லையிடப்பட்டிருக்கின்றன.

அதாவது, இந்தப்பிரதேசத்தில் உள்ள மானாவேட்டை என்று அழைக்கப்படும் பகுதியில் 86 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும் கள்ள வேட்டை என்ற பகுதியில் 130 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களும் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களாகும். இன்று அந்த நிலங்கள் வனவளத்திணைக்கத்தினால் வனப்பகுதியாக எல்லையிடப்பட்டிருக்கின்றது.

இப்பயிர்ச்செய்கை நிலங்களை வனவளத்திணைக்களத்திடமிருந்து விடுவித்து இங்குள்ள மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கும் போது இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வறுமை நிலை நீங்கி மக்கள் தொழில் வாய்ப்பைப்பெற்று வாழக்கூடிய ஒரு சூழல் உருவாகுமெனவும் மேற்படி கிராம மட்ட அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. (9-315)

# வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் விநியோகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக வவுனியா வடக்கில் 39 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்கப்படுவதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலைய மாவட்ட பொறுப்பதிகாரி பி.தனராஜ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வரட்சியான கால நிலை நீடித்து வருகிறது. அந்த வகையில் வவுனியா வடக்கு பிரதேசத்தில் காஞ்சுரமோட்டைப் பகுதி வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்தில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 105 பேர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து அவர்களுக்கான குடிநீரை விநியோகித்து வருகின்றது. மேலும் வரட்சி நிலை நீடித்தால் வேறு பல பகுதிகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(9-250)

# தந்தை செல்வாவின் 121 ஆவது ஜனன தினம்





வவுனியா பிரதான மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவுத்தூபியில் நேற்று தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட தலைவரும் முன்னாள் வடமாகாண சபை சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தலைமையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் 121 ஆவது ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழரசுக்கட்சி வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அன்னாரது நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தினார்கள்.(9-250)

# வவுனியா நெடுங்கேணி பகுதியில் காட்டு யானைகள் தொல்லை அதிகரிப்பு

## நடவடிக்கை எடுப்பதில் அதிகாரிகள் அசமந்தம்

(கண்டாவளை)

வவுனியா வடக்கு நெடுங்கேணி சேனைப்புலவு பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிரிகரித்து காணப்படுவதாகவும் இதனால் தாங்கள் பெரும் அச்சத்துடன் வாழ்வதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நெடுங்கேணி பிரதேசத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக காணப்படும் சேனைப்புலவு கிராமத்தில் கடந்த இரண்டு தினங்களாக காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறு காட்டு யானைகள் ஊர்மனைக்குள் சென்று மக்களின் வாழ்வாதாரத்திற்கான விவசாயச் செய்கைகளை முழுமையாக அழித்து வருகின்றன.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் காட்டு யானைகளின் தாக்கம் குறைவாக இருந்தபோதும், அண்மைய நாட்களாக யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றன.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக குடியிருப்புக்களுக்குள் புகும் காட்டு யானைகள் பயன்தரக் கூடிய மரங்களை அழித்து வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை [illegible] பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.(9-315)

கிளிநொச்சி பிரதேசத்தில்

# பாடசாலையில் இருந்து இடைவிலகும் சிறார்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கிராம மட்ட அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி கோணாவில் மற்றும் யூனியன்குளம் ஆகிய பகுதிகளில் குடும்ப வறுமையினாலும் குடும்பப் பிணக்குகள் காரணமாகவும் அதிகளவான சிறுவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகியுள்ளதாக தெரியவருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக காணப்படும் கோணாவில் யூனியன்குளம் தஞ்சை நகர் ஆகிய பகுதிகளில் அதிகளவான குடும்பங்கள் வறுமை நிலையில் காணப்படுவதாலும் குடும்பங்களில் கணவன்-மனைவிக்கிடையேயான வன்முறைகளால் குடும்பப்பிரிவுகள் காரணமாக சிறுவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

இதனால் அதிகளவானசிறுவர்கள்பாடசாலைகளுக்கு செல்லாத நிலையிலும் பாடசாலைகளுக்கு ஒழுங்கற்ற வரவுகளில் காணப்படுகின்றனர்.

தஞ்சைநகர் பகுதியில் 48 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் வசித்து வருவதுடன் இங்கு அதிகளவான குடும்பங்கள் குடும்ப வறுமையிலும் குடும்பப்பிணக்குகளிலும் பெண்தலைமைத்துவக்குடும்பமாக காணப்படுகின்றன.

இத்தகைய குடும்பங்களில் உள்ள சிறார்கள் பலர் பாடசாலைகளுக்கு செல்லாதும் ஒழுங்கற்ற வரவுகளிலும் காணப்படுகின்றனர்.

இச் சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாது நெல் உலர விடுதல், நெல் அறுவடை, தேங்காய் பிடுங்குதல், மணல் அகழ்வுகள் போன்ற தொழில்களுக்கு செல்வதாகவும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் பாடசாலை மட்டஅமைப்புக்களின் பிரதிநிதிகள், அதிபர், ஆசிரியர்கள் வீடு வீடாகச் சென்று பெற்றோருக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து வருகின்றனர்.

இருந்தும் குடும்ப வறுமை, குடும்ப வன்முறை,குடும்பப்பிரிவு என்பவற்றால் பிள்ளைகள் கல்வியை இடைநிறுத்தும்நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிராமங்களிலும் கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் என மூன்றுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இதற்கு மேலான அதிகாரிகள் எனப்பலர் உள்ளபோதும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் அக்கறை காட்டமை தொடர்பில் கிராமக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.(9-315)

# கிளிநொச்சி அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை மீள அமைக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திற்கான அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தினை மீளவும் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வட மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி,பச்சிலைப்பள்ளி ஆகிய நர்ன்கு பிரதேச செயலாளர் பிரிவுகளும் கரைச்சி, பூநகரி , ச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேச சபைகளையும் கொண்ட சுமார் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வரும் ஒரு மாவட்டமாக காணப்படுவதுடன், இங்கு 34 இற்கும் மேற்பட்ட தபாலகங்கள் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் காரணமாக மூடப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை மீள ஆரம்பிக்கப்படவேண்டும் என பொது அமைப்புக்கள் கோரியுள்ளன.

[illegible] பரந்தன் தபாலகம், பூநகரி தபாலகம், [illegible] தபாலகம்.கிளிநொச்சி தபாலகம் ஆகிய நான்கு பிரதான தபாலகங்களின் கீழ் சுமார் 34 இற்கும்மேற்பட்ட உப தபாலகங்கள் இயங்கி வருகின்றன.

இதனைவிட யுத்தம் காரணமாக செயலிழந்த முகமாலை மற்றும் ஆனையிறவு பகுதிகளுக்கான உப தபாலகங்கள் இது வரை மீள ஆரம்பிக்கப்படவில்லை என்றும் இதனை விட பாரதிபுரம் செல்வாநகர்,மயில்வாகனபுரம் ஆகிய பகுதிகளிலும் புதிய தபாலகங்களை நிறுவுவதற்கான கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் குறித்த விடயங்கள் பேசப்பட்டபோதும், இது தொடர்பில் எந்த முன்னேற்றங்களும் இல்லை எனவும் மேற்படி பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதேவேளை கடந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை யுத்தம் காரணமாக தற்காலிகமாக வவுனியாவிற்கு இடம்மாற்றப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தம் நிறைவு பெற்று மக்கள் மீள் குடியேறி பத்து வருடங்களை கடந்துள்ள போதும் குறித்த அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

மீள்குடியமர்வின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் தபாலகங்கள் மீள இயங்க ஆரம்பித்து ஒன்பது வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்று வரை வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் காரியாலயத்தின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இயங்கி வருகின்றது.


கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கிய மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தை கிளிநொச்சியில் அமைக்க வேண்டும் என மேற்படி அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.(9-315)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புருசோத்தமன் எழுதும்

# கம்பவாரிதிக்கு ஓர் அன்பு மடல்




நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியில் தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்தைக் குறைப்புச் செய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அனுமதி கேட்டவர் ஜனாதிபதி மைத்திரி.

தவிர, புங்குடுதீவு மாணவி வித்தியா கொல்லப்பட்டபோது உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, அந்த மாணவியின் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் கூறியவர். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சென்று அந்த மாணவிகளைச் சந்தித்து பயம் கொள்ளாதீர்கள் என்று தைரியம் கொடுத்தவர். வலிகாமம் வடக்கிற்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரி அங்குள்ள நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்று, குடிசை வீட்டுக் குந்தில் குந்தியிருந்து குசினியில் ஆக்கப்பட்ட சமையலைப் பார்த்துவிட்டு வலி.வடக்கில் குடியமர்த்தக்கூடாது என்று தென்பகுதியில் இருந்து கொக்கரிப்பவர்கள் ஒருக்கால் வலி. வடக்கு மக்களின் அவலத்தை இங்கு வந்து பார்க்கவேண்டும் என அறைகூவல் விடுத்தார்.

அதுமட்டுமல்ல யாழ்ப்பாணத்திற்கு அவர் வரும் போதெல்லாம் எந்தவித பாதுகாப்பு படோபகாரங்களும் இல்லாமலே வந்து போனார்.

ஆனால் ஜனாதிபதி வடக்கிற்கு வந்த எந்தச் சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சியின் தலைமைகள் அவருடன் வரவும் இல்லை, அவரைச் சந்திக்கவும் இல்லை.

பாதுகாப்பு பந்தோபஸ்து இல்லாமல் மிக எளிமையாக ஜனாதிபதி மைத்திரி வடபகுதிக்கு வருவதைச் சாதகமாக்கி அவரைக் கொல்வதற்கான சதி



வலி.வடக்கில் ஜனாதிபதி

முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதான தகவல்களை புலனாய்வுத்துறை வெளியிட்டபோது ஜனாதிபதியின் வடக்கிற்கான விஜயங்களும் கணிசமாகக் குறைக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களையும் சம்பந்தப்பட்ட இடங்களையும் நேரில் சென்று நிலைமையை அவதானித்து, படிப்படியாக காணி விடுவிப்புக்களையும் மீள்குடியமர்வுகளையும் செய்து வந்த ஜனாதிபதி மைத்திரியின் பால் தமிழ்மக்கள் ஈர்க்கப் பட்டுவிடுவர் என்பதனாலும் ஐக்கிய தேசியக் கட்சி மீதான விசுவாசத்தின் காரணமாகவும் ஜனாதிபதி மைத்திரியின் உறவைத் தமிழரசுக் கட்சியின் தலைமை வெட்டி விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்க வேண்டும். எனவே அவரை எதிர்த்து நிற்கின்ற மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் ஆதரிக்கவேண்டும் என்று கூறிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் வழி தமிழ் மக்கள் ஜனாதிபதி மைத்திரியைத் தேர்தலில் ஆதரித்தார்கள். அது மைத்திரியை ஜனாதிபதியாக்கியது.

இருந்தும் இரா.சம்பந்தர் தனது அரசியல் சாணக்கியத்தை அமுல்படுத்த முடியாதவராக-ஜனாதிபதி மைத்திரியுடன் நெருங்கிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாதவராக ஆக்கப்பட்டார்.

இதை ஆக்கியவர்கள் தமிழரசுக் கட்சியில் முக்கிய இடத்தில் இருக்கக்கூடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வேண்டியவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

என்ன செய்வது, தமிழ் இனத்திற்கு தன் அரசியல் காலத்தில் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற நினைப்பை இரா. சம்பந்தர் ஐயா கொண்டிருந்தாலும் அவரின் முதுமையும் பக்க பலத்தின் தேவையும் காரணமாக மற்றவர்களின் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியவராக மாறினார்.

இதனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான உறவுகள் முற்றுமுழுதாக முடிவுறுத்தப்பட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான உறவு வலுப்படுத்தப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றித்த தமிழரசுக் கட்சி இரா. சம்பந்தர் ஐயாவின் கேள்விக் கணைகளைத் தடுக்கும் பொருட்டு அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி பெற்றுக் கொடுக்கப்பட்டது. அவ்வளவு தான் அந்தப் பதவி சம்பந்தர் ஐயாவின் வாயை அடைத்தது.


அங்கு ஞானசம்பந்தக் குழந்தை திருவாய் மலர்ந்தழுததால் வேதநெறி தழைத்தோங்கியது. இங்கு சம்பந்தர் ஐயா வாய் மூடி மௌனியாக இருந்ததால் தமிழினத்திற்குச் சாதகமாக இருந்த அத்தனை சூழ்நிலைகளும் தவிடுபொடியாக்கப்பட்டன.

இந்த நிலைமைகள் ஜனாதிபதி மைத்திரியையும் தமிழ் மக்களையும் பிரித்தாண்டது. உண்மையில் ஜனாதிபதி மைத்திரியின் கரத்தைப் பலப்படுத்தி அவர் மூலமாக சில வேலைத் திட்டங்களை நாம் செய்து முடித்திருக்கவேண்டும். ஆனால் அது திட்டமிட்டு கைவிடப் பட்டது. (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எமிசாட்' உட்பட 28 செயற்கைக்கோள்களுடன் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்த பி.எஸ்.எல்.வி.



(டில்லி)

பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் எமிசாட் செயற்கைக் கோள், பிறநாடுகளின் 28 சிறிய செயற்கைக் கோள்கள் ஆகியவற்றைத் தாங்கிக்கொண்டு, பி.எஸ்.எல்.வி.சி-45 ரொக்கெட் நேற்றுக் காலை வெற்றிகரமாக விண்ணில் சீறிப் பாய்ந்தது.

27 மணி நேர கவுன்ட் டவுன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை 6.27 மணிக்குத் தொடங்கியது, கவுன்ட் டவுன் நிறைவு பெற்றதும் நேற்றுக் காலை விண்ணில் பாய்ந்தது பி.எஸ்.எல்.வி.ரொக்கெட்.

இந்த ரொக்கெட்டுடன் அமெரிக்காவின் 24 செயற்கைக் கோள்களும் லிதுவேனியா நாட்டின் 2 செயற்கைக்கோள்களும் ஸ்பெயின், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் சார்பில் தலா ஒரு செயற்கைக்கோளும் டி.ஆர்.டி.ஓ. சார்பில் எமிசாட் செயற்கைக் கோளும் செலுத்தப்பட்டது.

இஸ்ரோவால் வடிவமைக்கப்பட்ட எமிசாட் செயற்கைக்கோளானது பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு பயன்பாட்டுக்காக விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த செயற்கைக்கோளின் மொத்த எடை 436 கிலோவாகும்.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் கே.சிவன் கூறுகையில்,"

இது எங்களுக்கு மிகச் சிறப்பான திட்டம். 4 விதமான நிலைகளை பி.எஸ்.எல்.வி. ரொக்கெட்டில் பயன்படுத்தி இருக்கிறோம்.

முதல்முறையாக பூமியின் வெவ்வேறு நீள்வட்டப் பாதையில் செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட உள்ளன" எனத் தெரிவித்தார். (7)

## இந்தியாவுக்கான பாக். தூதுவர் திடீரென மாற்றம்

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக பதவி வகிக்கும் சொஹைல் மக்மூத் திடீரென மாற்றப்பட்டுள்ளார்.

இதை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மக்மூத் குரேஷி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக பதவி, வகிக்கும் சொஹைல் மக்மூத் திடீரென மாற்றப்பட்டுள்ளார்.

அவர் எதிர்வரும் 16 ஆம் திகதி ஓய்வு பெறுகிற பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளர் தெஹ்மினா ஜான் ஜுவா இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மக்மூத் குரேஷி முல்தான் நகரில் நேற்று நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அப்போது அவர் கூறும் போது, "பிரதமர் இம்ரான்கானுடன் கலந்து பேசி, பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளராக இந்திய தூதர் சொஹைல் மக்மூத் நியமிக்கப்பட்டுள்ளார்.


இதையொட்டி அவருடன் தொலைபேசியில் பேசி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்தேன்.

அவரது பரந்த அனுபவம் எனக்கும் கூட உதவி இருக்கிறது" என கூறினார். (7)



## மோடி அரசு என்னை பகடைக்காயாக பயன்படுத்துவது தற்போது நிரூபணம்

### விஜய் மல்லையா கூறுகிறார்



(லண்டன்)

மோடி அரசு தன்னை பகடைக்காயாக பயன்படுத்துவதாக நான் ஏற்கனவே கூறியது சரி என்று நிரூபணமாகி விட்டது என விஜய் மல்லையா தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி அண்மையில் அளித்த ஒரு பேட்டியில், "விஜய் மல்லையா செலுத்த வேண்டிய கடன்களை விட அதிகமாக, ரூபாய் 14 ஆயிரம் கோடி மதிப்புள்ள அவருடைய சொத்துகளை பறிமுதல் செய்து விட்டோம்" என்று கூறியிருந்தார்.

இதை சுட்டிக்காட்டி, விஜய் மல்லையா தனது 'டுவிட்டர்' பக்கத்தில் நேற்று ஒரு பதிவு வெளியிட்டார். அதில் அவர் கூறியிருப்பதாவது.

நான் செலுத்த வேண்டிய கடன்களை விட அதிகமான சொத்துகளை பறிமுதல் செய்து விட்டதாக பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இதன்மூலம், மோடி அரசு தன்னை பகடைக்காயாக பயன்படுத்துவதாக நான் ஏற்கனவே கூறியது சரி என்று நிரூபணமாகிவிட்டது.

முழுமையாக கடன்களை திரும்ப பெற்று விட்டதாக உயர்ந்த அதிகாரம் படைத்தவரே சொன்ன பிறகும், பா.ஜனதா செய்தித்தொடர்பாளர்கள் ஏன் இன்னும் என்னைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள்?

இவ்வாறு விஜய் மல்லையா மேலும் கூறியுள்ளார். (7)

## நேபாளத்தில் ப

## நாற்பது பேர்





(காத்மண்டு)

**நேபாளத்தில் ஏற்பட்ட கடுமையான புயல், மழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி 40 பேர் பலியாகியுள்ளனர். 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**

நேபாளத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து



## முதல் பெண் ஜ
## ஜீசானா காபுட்

(பிரட்டிஸ்லாவா)

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னிறுத்தி பிரசாரம் மேற்கொண்ட ஜுசானா காபுட்டோவா, சிலோவாக்கியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

எவ்வித அரசியல் முன் அனுபவமும் இல்லாத ஜுசானா, தன்னை எதிர்த்து நாட்டின் ஆளும் கட்சி முன்னிறுத்திய

## 2020 ஆம் அ
## 22 இலட்சம் ப
## நிரப்பப்படும் - ர

காங்கிரஸ் மத்தியில் ஆட்சிக்கு வந்தால், 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்குள் அரசால் நிரப்பப்படாமல் இருக்கும் 22 இலட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி வாக்குறுதி அளித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் மே 19 ஆம் திகதிவரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. வேட்பாளர்களை அறிவித்துள்ள பாஜக, காங்கிரஸ் மற்றும் மாநிலக் கட்சிகள் பிரசாரத்தில் தீவிரம் காட்டியுள்ளன.

காங்கிரஸ் கட்சி தங்களின் தேர்தல் அறிக்கையை நாளை வெளியிடும் நிலையில், அந்தக் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி முக்கிய வாக்குறுதிகளையும், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் செய்யப்படும் சீர்திருத்தங்களையும் அறிவித்து வருகிறார்.

நியாயம் எனும் திட்டத்தின் மூலம் 5 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ரூ.72 ஆயிரம் குறைந்தபட்ச ஊதியமாக வழங்கும் திட்டத்தைக் கொண்டுவருவோம் என ராகுல் காந்தி அறிவித்தார். வேலையின்மை பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். நிதி ஆயோக் நீக்கப்பட்டு மீண்டும் திட்டக்குழு கொண்டுவரப்படும்

### பொள்ளாச்சி விவகாரம்

## உண்மையை ஆதாரத்துடன் வெளியிடப் போகின்றேன்
## தினகரன் முழக்கம்

பொள்ளாச்சி விவகாரம் பற்றிய உண்மைத்தன்மைகளை தேர்தலின் பின் ஆதாரத்துடன் வெளியிடுவேன் என அ.ம.மு.க துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார்.


நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் அ.ம.மு.க வேட்பாளர் சாமிநாதனை ஆதரித்து நேற்று முன்தினம் ஞாயி ற்றுக்கிழமை பிரசார பணிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# புயல் மழை ... உயிரிழப்பு!



வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் மக்கள் சிக்கி தவித்து வருகின்றனர்.

இதையடுத்து இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் மீட்புப்பணியினர் வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுக்காலை ஏற்பட்ட புயல் மற்றும் கன மழையில் சிக்கி 30 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 400 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்களை மீட்டு பொலிஸார் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (7)

# ...னாதிபதியாக ...டோவா தேர்வு

வேட்பாளரான மார்ஸ் செஃபோகோவிக்கை வீழ்த்தி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக, இந்தத் தேர்தல் நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போர் என்று அவர் கூறியிருந்தார்.

கடந்த ஆண்டு சிலோவாக்கியாவில் புலனாய்வு பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து இந்த தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில், தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக முடிவெடுத்ததற்கு குசியாக்கின் மரணம் ஒரு முக்கிய காரணம் என்று ஜ°சானா கூறியிருந்தார்.

தேர்தலில் பதிவான வாக்குகள் பெரும்பாலும் எண்ணப்பட்டுள்ள நிலையில், ஆளும் கட்சியின் தரப்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் 42 சதவீத வாக்குகளை பெற்றிருந்த நிலையில், ஜ°சானா 58 சதவீத வாக்குகளுடன் வெற்றியை பதிவு செய்தார். (7)

# ...ஆண்டுக்குள் ...ணியிடங்கள் ...ராகுல் உறுதி



என வாக்குறுதி அளித்தார் ராகுல் காந்தி.

இந்நிலையில் ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வெளியிட்டுள்ள அறிவிப்பில், "2019 ஆம் ஆண்டு மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால், மத்திய அரசால் நிரப்பப்படாமல் இருக்கும் 22 இலட்சம் பணியிடங்கள் நிரப்பப்படும். ஆட்சிக்கு வந்த ஒன்றரை ஆண்டுக்குள் அதாவது 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்குள் அனைத்து காலியிடங்களும் நிரப்பப்படும் என உறுதியளிக்கிறேன்.

மத்திய அரசிடம் இருந்து மாநிலங்களுக்கு சுகாதாரம், கல்வி, உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி தொடர்பான பணியிடங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் ஒவ்வொரு காலியிடமும் நிரப்பப்படும்" எனத் தெரிவித்துள்ளார். (7)

ஈடுபட்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், பொள்ளாச்சி பாலியல் கொடூர சம்பவத்தில் குற்றவாளிகளை தப்ப வைக்கும் நோக்கத்துடனேயே சி.பி.சி.ஐ.டி விசாரித்து வருகிறது.

இந்த விவகாரத்தில் என்ன நடந்தது, யார் பின்னணியில் உள்ளனர் என்ற உண்மையை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு பிறகு ஆதாரத்துடன் Whats App இல் வெளியிடுவேன் என தெரிவித்துள்ளார்.

தமிழகத்தை உலுக்கிய இந்த விவகாரம் தற்பொழுது அனைவர் மத்தியிலும் பேசுபொருளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேர்தல் களம் சூடுபிடித்துள்ள இந்த காலப்பகுதியில் குறித்த விவகாரத்தினை தேர்தல் பரப்புரைகளில் பயன்படுத்த வேண்டாமென அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. (7)

# அமெரிக்காவில் வீதி விபத்தில் இந்திய வைத்தியர் உயிரிழப்பு



அமெரிக்காவின் சிகாகோ நகரில் நிகழ்ந்த வீதி விபத்தில் ஐதராபாத் நகரைச் சேர்ந்த பல் வைத்தியர் உயிரிழந்தார்.

ஐதராபாத் நகரின் விகாராபாத் பகுதியில் உள்ள ஸ்ரீ சாய் பல் மருத்துவ கல்லூரியில் பயின்ற அர்ஷத் முஹம்மத் என்பவர் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். சிகாகோ நகரில் உள்ள இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவம் தொடர்பான உயர்நிலை பட்டம் பெற்ற அர்ஷத், அங்கேயே பட்டமேல் படிப்பு சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சிகளை மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில், சிகாகோ நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வீதி விபத்தில் சிக்கிய அர்ஷத் முஹம்மத் பரிதாபமாக உயிரிழந்தார். (7)

# வெனிசுவெலா விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்துங்கள்

## அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

(மொஸ்கோ)

வெனிசுவெலா விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்துங்கள் என்று அமெரிக்காவுக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெனிசுவெலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவுக்கு எதிராக எதிர்க்கட்சி தலைவர் ஜ°வான் கெய்டோ போட்டி அரசாங்கம் நடத்துகிறார். தன்னை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துள்ளார். அவருக்கு அமெரிக்கா உட்பட 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு அளித்துள்ளன.

அதேநேரத்தில் ஜனாதிபதி மதுரோவுக்கு ரஷ்யா மற்றும் சீனாவும் ஆதரவு அளித்துள்ளன. இதற்கிடையே ரஷ்யாவின் 2 இராணுவ விமானங்கள் கராகஸ் விமான நிலையத்துக்கு வெளியே இராணுவ வீரர்கள் மற்றும் ஆயுத தளபாடங்களுடன் ஒருவாரத்துக்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளது. உடனே ரஷ்ய படைகள் வெளியேற வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தினார். அதற்கு ரஷ்யா-வெனிசுவெலா இடையே இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தம் உள்ளது.

வெனிசுவெலாவுக்கு ரஷ்யா ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது. தற்போது ரஷ்யா 'எஸ்-300' என்ற ஏவுகணையை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது. அதனால் இங்கு விமான இராணுவங்களும் வீரர்களும் முகாமிட்டுள்ளதாக தெரிவித்தது.

இந்தநிலையில் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான்பால் ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில், வெனிசுலோவில் இருந்து வெளிநாட்டு படைகள் உடனடியாக வெளியேற வேண்டும் என கூறப்பட்டிருந்தது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் மரியா ஷகாரோவா வெளியிட்டுள்ள அறிக்கையில் வெனிசுவெலாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும், மிரட்டுவதையும் அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும். பொருளாதார பிரச்சினையை ஏற்படுத்தி உள்நாட்டு போர் உருவாகுவதையும் நிறுத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது. (7)

# ஸ்பெயினிலுள்ள வடகொரியத் தூதரகம் தாக்குதல்

## அறிக்கை வெளியிட்ட வடகொரியா

(பியாங்யாங்)

ஸ்பெயினிலுள்ள வடகொரியத் தூதரகத்தில் கடந்த மாதம் சிலர் பலவந்தமான முறையில் நுழைந்ததைப் பயங்கரவாதத் தாக்குதல் என வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரிய வெளியுறவு அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் இடம்பெற்று ஒரு மாதமாகியுள்ள நிலையில் அதுகுறித்து பியாங்யாங் முதல் முறையாக கருத்து வெளியிட்டுள்ளது.

அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவும் வடகொரியாவுக்கு எதிரான குழுவும் குறித்த சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாகவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுகுறித்து தொடர்ச்சியாக அவதானித்து வருவதாக வடகொரிய வெளியுறவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (7)

# திடீரெனத் தீப்பற்றிய பேருந்து! 20 பேர் பலி; 8 பேர் படுகாயம்




பயணிகளை ஏற்றிச் செல்ல தயாரான பேருந்து ஒன்று திடீரென தீப்பற்றிய சம்பவம் ஒன்று பெரு நாட்டின் தலைநகரான லீமாவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது. இதன்போது 20 பேர் பலியானதோடு 8 பேர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் இரண்டு தட்டு பேருந்து ஒன்றே தீப்பிடித்து எரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகில் குத்தும் செயற்பாடுகளை எதிர்க்கட்சி சிறப்பாக முன்னெடுப்பு

## அமைச்சர் கிரியெல்ல காட்டம்



(கண்டி)

எதிர்க்கட்சியினர் மீது நம்பிக்கை வைத்தமை யாலேயே இரண்டு அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் தோல்வியடைய வேண்டி ஏற்பட்டது .எதிர்க்கட்சியினர் பின்னால் இருந்து முதுகில் குத்துவது போன்று செயற் படுவதாக பொது நிறுவனங்கள், கண்டி மர புரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமை ச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம்சாட்டினார்.

"என்டபிரைஸ் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் 'ஓர்கிட்' மலர்ச் செய்கையாளர்களுக்கு கடன் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கண்டி தபாலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு குற்றச்சாட்டை முன் வைத்தார். வரவு-செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் வாக் கெடுப்புக்குச் செல்வதில்லை யென கட்சித் தலைவர்கள் கூட் டத்தில் முடிவெடுத்திருந்தோம். இது விடயத்தில் அவர்களை நம்பியதாலேயே இரண்டு அமை ச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் மீதான வாக்கெடுப்பில் தோல்வி யடைய வேண்டி ஏற்பட்டது.

இருப்பினும் அவற்றை மீள வும் பாராளுமன்றத்தில் சமர்ப் பித்து நிறைவேற்ற முடியும். எதிர் க்கட்சியினர் பின்புறமாக இருந்து கத்தியால் குத்துவது போன்ற செயற்பாடுகளைச் செய்வதில் திறமையானவர்களாக இருக் கின்றனர்.

கடந்த வருட இறு தியிலும் இவ்வாறு பின்புறமாக இருந்து கத்தியால் குத்தும் செயல்களை அரங்கேற்றியிருந்தனர். அதே போலவே கடந்த வியாழக் கிழமையும் பாராளு மன்றத்தில் நடந்து கொண்டனர் எனவும் அமைச்சர் கிரியெல்ல தெரிவித் தார்.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தோல்வியடைந் தமை இது முதல் தடவையல்ல.

இதற்கு முன்னர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவின் அமை ச்சுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் தொண்டமான் அமைச்சராக இருந்த போது அவருடைய அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு கள் தோல்வியடையச் செய்யப் பட்டிருந்தன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிணைமுறி மோசடியிலிருந்து தப்பிக்கவே பிரதமர் தேசிய அரசை அமைக்க முயற்சி

## மகிந்த அணி மகிந்தானந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியை மூடி மறைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங் கத்தை அமைக்க முயற்சிகளை மேற்கொள்வதாக மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் மகிந் தானந்த அளுத்கமகே தெரி வித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கூட்ட மைப்புடன் மீண்டும் தேசிய அரசாங்கத்தை அமைக்க தீர் மானித்துள்ளமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்திலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன வெளியேறியதை தொடர் ந்தே பிணைமுறி மோசடியில் முன்னேற்றகரமான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டன. விசாரணை அறிக்கையை அடிப் படையாகக் கொண்டு குற்ற வாளிகள் ஆரம்பத்திலிருந்து கைது செய்யப்பட்டு விசாரணை களுக்கு உட்படுத்தப்படுகின் றனர்.

இந் நிலையில் இம்மாத இறுதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் கைது செய்யப்படுவார். அவரைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மீது விசாரணைகளுக்காக கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஏறாவூரில் திடீர் தீ பரவல்- வீடு தீக்கிரை



(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூரில் ஏற்பட்ட திடீர் தீ பரவலில் வீடொ ன்று தீக்கிரையாகியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தி னம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் வீடும் அதன் உடைமைகளும் முற் றாக எரிந்து சாம்பலாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் நகர மத்தி முனை வளவு வீதியை அண்மித்துள்ள வீடொன்றே இவ்வாறு தீக்கிரை யாகியுள்ளது.

குறித்த வீட்டில் நீண்ட கால மாக வசித்து வந்த வாடகைக் குடியிருப்பாளர்கள் சம்பவ தின த்திற்கு முதல்நாள் ஏறாவூரி லிருந்து தம்பாளை எனும் ஊரு க்குச் சென்றிருந்த வேளையி லேயே வீட்டில் இந்த அசம்பா விதம் இடம்பெற்றன.

தீப் பரவலை அவதானித்த அயலவர்கள் உடனடியாக பொலி ஸாருக்குத் தகவல் தெரிவித்த தையடுத்து மட்டக்களப்பு மாந கர சபையிலிருந்து தீயணைப்புப் படையினர் வரவழைக்கப்பட் டனர்.

தீயணைப்புப் பிரிவினருடன் இணைந்து பொதுமக்களும் ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் கட்டுப்படுத்தியுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு ள்ளது. தீ பரவலுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடு த்து வருகின்றனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்க்கை நாடகம்

இந்த உலகம் ஒரு நாடக மேடை. அதில் நாம் அனைவரும் நடிகர்கள் என பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்ப உலகம் போற போக்கைப் பார்த்தால் அது நூற்றுக்கு நூறு உண்மை என நன்றாகப் புரிகின்றது! ஏன் இப்ப யாருமே உண்மையா நடக்கிறதா தெரியவில்லை!

எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் நடித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்! அதுவும் இந்த நாடகத்தில் வில்லன்கள் தான் அதிகம். ஆனால் அவர்கள் தங்களை கதாநாயகர்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உலகம் ஒரு நாடக மேடை என பெரியவர்கள் சொன் னதன் அர்த்தம் வேறு. அது வேதாந்தம். வாழ்க்கை என்ற நாடகத்தில் நாம் ஆரம்பத்திலிருந்து கடைசி வரைக்கும் நாம் ஒரே பாத்திரமாக இருப்பதில்லை. பலவிதமான பாத்திரங்களை ஏற்க வேண்டியிருக்கும்.

ஒரு நாடகத்தில் நடிக்கும் போது என்ன வேடம் போடுகின் றோமோ அதற்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்ள வேண்டும் இல்லையா? ராஜா வேடம் போட்டுவிட்டு சேவகன் மாதிரி நடிக்கக் கூடாது. அதேபோல வாழ்க்கையிலும் நாம் ஏற்றி ருக்கும் பாத்திரத்திற்குத் தகுந்த மாதிரி நடந்துகொள்ள வேண் டும். அது தெரியாததினால் தான் பலபேர் நிம்மதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றோம்.

இப்ப உதாரணத்திற்கு ஒருவரைப் பார்ப்போம். காலையில் அலுவலகத்திற்கு போகும் வரைக்கும் அவர் ஒரு மனை வியின் கணவர், குழந்தையின் அப்பா. அவர் அலுவலகத் திற்குப் போன பிறகு கணவர், அப்பா என்கின்ற வேடம் எல்லாம் கலைந்து ஒரு அலுவலகர் பாத்திரத்தை ஏற்கின்றார். அலுவ லகத்திற்குப்போன பின் அங்கே இருப்பவர்களிடம் நான் உங் களுடைய அப்பா, தாத்தா என்று சொல்லக் கூடாது! அலுவ லகர் வேடத்தில் இருந்து கொண்டு 'அப்பா' என்று சொல்லக் கூடாது. "மகனே! நான் கொடுத்த விடயம் ரைப் ஆகிவிட்டதா" என கொஞ்ச ஆரம்பித்தால் ''போப்பா உனக்கு வேற வேலை இல்லை!'' எனச் சொல்லிவிட்டுப் போய் விடுவர். அதுமட்டு மன்றி போவதற்கு முன் சினிமா பார்ப்பதற்கு காசு கொடு எனக் கேட்டாலும் கேட்பர். இவர் அப்பா மாதிரி நடக்கும் போது அவர் மகன் மாதிரி நடந்து கொள்ளக் கூடாதா? வாழ்க் கையில் நாம் குழப்பம் அடைவதற்கு காரணம் என்ன வென நினைக்கி றீர்கள்? எந்தப் பாத்திரத்தில் இருக்கிறோமோ அதற் குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளாததனால்தான்.

அலுவலகத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பியவுடன் திரும்ப வும் கணவனாகவும் அப்பாவாகவும் மாற வேண்டும். ஆனால் பலர் அப்படி மாறுவதில்லை. அங்கேயும் அலுவலகத்தில் நடப்பது போல் நடந்தால் பிறகு வாங்கிக்கட்டிற்று அவஸ்தைப் படுவது எல்லாம் எதனாலே? வேடத்திற்குத் தகுந்த மாதிரி நடந்து கொள்ளத் தெரியாததனால்தான்! நீங்கள் பெரிய அலுவலகர்தான். இல்லையென்று சொல்லவில்லை! மாலை வீட்டுக்கு போகிறீர்கள். உங்களுடைய மனைவி வீட்டுக்குத் தேவையான பொருட்களை சொல்கிறார். அதைக் கேட்டுக் கொண்டு போய் வாங்கிக் கொடுக்க வேண்டியதுதானே. அதை விட்டிட்டு இதை இப்படி சொல்லாமல் எழுதி பைலில் போட்டிட்டு வந்து கொடு என்று சொன்னால் வாங்கிக்கட்டாமல் என்ன செய்வீர்கள். வீட்டிற்குப் போன பிறகு கணவனாகவோ அப்பா வாகவோ மாறாமல் அலுவலராக இருக்கிறவர்கள்தான் அதிகம். வீட்டில் இருப்பவர்கள் மேல் சிடுசிடு என கோபப்படு வது, குழந்தைகள் அருகே வருவதற்கே பயப்படும் நிலைமை உங்களுக்கும் கஷ்டம் மற்றவர்களுக்கும் கஷ்டம். உங்க ளுடைய உண்மையான பாத்திரம் பிரம்மம் அல்லது ஆத்மா. உங்களுக்கு உடம்பு இருக்கு. மனம் இருக்கு. ஆனால் உடம்போ மனமோ இல்லை! இந்த பாத்திரத்திற்கு ஏற்ற மாதிரி நடக்க வேண்டுமென்றால் அதற்குப் பயிற்சி தேவை. பயிற்சிக் காலத் திலே பல கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்யும். கார் ஓட்டக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால் கூட கட்டுப்பாடு உண்டு. ஆனால் கற்றுக் கொண்டபின் நீங்கள் காரிலேயே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எங்கே வேண்டுமென்றாலும் சுத்தலாம். அதேமாதிரி உங்க ஆன்மீகப் பயிற்சி முடிந்தவுடன் நீங்கள் உலக காரியங்களில் பங்கெடுக்கலாம். அப்ப உலகம் உங்களோடு ஒட்டிக் கொள்ளாது...

பாத்திரத்திற்கு ஏற்ற மாதிரி நடிக்க வேண்டியது பற்றி இதுவரைக்கும் பேசிக் கொண்டிருந்தோம். காசுக்குத் தகுந்த மாதிரி நடிக்கிறது பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வில்லி யம் கில்லெட் என அமெரிக்க நடிகர் ஒருத்தர் சின்ன வயதிலேயே நாடகக் கம்பனியிலே சேர்ந்து நடித்துக்கொண்டிருந்தார்.

ஒரு நாடகத்திலே இவர் இறப்பது போல் காட்சி. இவர் அதில் நடித்தார். நாடகக்குழு நிர்வாகத்திற்கு இவரது நடிப்பில் திருப்தி இல்லை! "என்ன சேர்! இறப்பது போல நடிக்க வேண்டிய நீங் கள் அந்த நேரத்தில் சிரித்தீர்கள். அதற்கு அந்த நடிகர் நீங்கள் கொடுக்கும் சம்பளத்தைப் பார்த்தால் அதை வாங்கிப் பிழைப் பதை விட இப்படி சிரித்துக்கொண்டே சாகிறது எவ்வளவு மேல் இல்லையா என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகள் இல்லையெனக்கூறி அரசு தப்பித்துக் கொள்ளக்கூடாது


## நாடாளுமன்றில் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**அரசியல் கைதிகள் யாரும் இல்லை எனக் கூறி அரசாங்கம் தப்பித்துக்கொள்ளக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்த வருடத்திற்கான வரவு-செலவுத்திட்டம் மீதான குழு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தக் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்த வேண்டும். அரசியல் கைதிகள் யாரும் இல்லை எனக் கூறி அரசாங்கம் தப்பித்துக்கொள்ளக் கூடாது என தாம் வலியுறுத்த விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

உரிமைக்காகப் போராடியவர்களையே நாங்கள் அரசியல் கைதிகள் என அழைக்கின்றோம் எனவும் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமர் தலைமையில் யொவுன்புர நிறைவு



(அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டை வீரவிலயில் நான்கு நாட்களாக இடம்பெற்ற யொவுன்புர என்ற இளைஞர் முகாம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்தது.

இதன் நிறைவு விழா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. விழாவைத் தொடர்ந்து யொவுன்புரவுக்கான உத்தியோகப்பூர்வ இலட்சினை அறிமுகப்படுத்தப்பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு இளைஞர்கள் அடங்கலாக 8000க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி எரங்க வெலி அங்கே தலைமையில் நடைபெற்ற யொவுன்புர திடரில் பல்வேறு ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

1984 ஆம் ஆண்டு யொவுன்புரய இளைஞர் முகாம் முதலில் இடம்பெற்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்போது கல்வி, இளைஞர் அலுவல்கள் அமைச்சராக கடமையாற்றினார்.

நிறைவு நாள் நிகழ்வில் அழகு ராணி மற்றும் ஆணழகன் தெரிவு போட்டி இடம் பெற்றது. முகாமில் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகள் முகாம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் ஆற்றல்களை மேம்படுத்தி கொள்வதற்கு இது தளமாக அமைந்தது என்றும் தெரிவித்தனர். (இ-7)

## மகிந்த குடும்ப ஆட்சியை கைவிடவில்லை

# கோத்தபாயவை வீழ்த்துவது ஐ.தே.கவிற்கு சவாலில்லை

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(களனி)

மகிந்த ராஜபக்ஷவையே வீழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சிக்கு, கோத்தபாய ராஜபக்ஷவை வீழ்த்துவதெல்லாம் ஒரு சவாலே இல்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில், ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே சிறப்பான வேட்பாளர் என்றும் இவரைத் தவிர சிறந்த தலைமைத்துவம் கட்சியில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

களனியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ராஜபக்ஷ குடும்பத்திலிருந்துதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது வேட்பாளர் வருவார் என்பதை நான் என்றோ அறிவேன். அந்தத் தரப்பினர், இன்னும் குடும்ப ஆட்சியைக் கைவிடவில்லை.



ராஜபக்ஷ குடும்பத்தின் பிரதான நபரையே தோற்கடித்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு, அந்தக் குடும்பத்திலிருந்து இன்னொருவர் வருவது பெரிய சவாலாக இருக்காது.

அவரைத் தோற்கடிப்பதற்கான நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கும். ஒரு வேளை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் கோத்தபாய ராஜபக்ஷ சிறைக்கேதும் சென்றுவிட்டால், அதுதான் பாரிய சவாலாக அமையும்.

கோத்தபாய ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை வைத்துதான் இதனைக்கூறுகிறேன். எவ்வாறாயினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் ஒரு தீர்மானத்துக்கு வரவில்லை.

ஆனால், தேர்தல் காலத்தின் போது, தலைவரை ஓரம்கட்டி இன்னொருவரை அழைத்து வந்து வெற்றி பெற வைத்த கடந்த கால தவறை மட்டும் இந்தமுறை செய்ய மாட்டோம் என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறோம்.

இதனை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. ஒரு வேளை, அனைவரும் இணக்கம் வெளியிட்டால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எமது ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவார்.

எமது கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இதற்கு எதிர்ப்பை வெளியிடுகிறார்கள். அவ்வாறாயின், பிரதமரை விட சிறந்த தலைவர் ஒருவரையே நாம் தேர்தலில் களமிறக்க வேண்டும்.

எனினும், அவ்வாறான ஒருவர் எமது கட்சியில் இப்போது இருக்கிறார் என்று நான் கருதவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நிறைவேற்று அதிகாரத்தை இரத்து செய்ய வலியுறுத்தி ஜே.வி.பியினர் போராட்டம்





(பூண்டுலோயா)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்துச்செய்யுமாறு வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியினரால் பூண்டுலோயாவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டம் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சுமார் 100ற்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். எதிர்ப்பு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை கைகளில் ஏந்திக் கோசமிட்டவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இதன்போது மீண்டும் ஜனாதிபதி தேர்தல் வேண்டாமென்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (இ-7)

# தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு பெண் பரிதாபமாக உயிரிழப்பு

நாடளாவிய ரீதியில் தாதியர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயது இரேஷான என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மூளையில் ஏற்பட்ட கட்டி ஒன்றினால் தனியார் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது தாதியர்களால் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அங்கு அவருக்கு மருந்து வழங்காமையாலேயே அவர் உயிரிழந்ததாக குடும்பத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இரண்டு நாட்களாக தனது மனைவிக்கு மருந்து வழங்கவில்லை என சட்ட வைத்தியர் தன்னிடம் குறிப்பிட்டதாக உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்தார்.

இதுவொரு கொலை என அவரது கணவர் குற்றம் சுமத்தியுள்ளார். எனினும் இந்தக் குற்றச்சாட்டை வைத்தியர்கள் நிராகரித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித எச்சங்கள் ஆய்வு அறிக்கையை விக்னேஸ்வரன் நிராகரிப்பு; கம்மன்பில அதிர்ச்சி



(கொழும்பு)

**மன்னார் புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக, புளோரிடாவின் பீட்டா ஆய்வகத்தில் நடத்தப்பட்ட காபன் ஆய்வு அறிக்கையை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நிராகரித்திருப்பது குறித்து கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.**

"ஓய்வுபெற்ற நீதியரசர் இத்தகைய முடிவை எடுத்திருப்பது உண்மையிலேயே அதிர்ச்சியை அளிக்கிறது. மன்னார் புதைகுழி விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் செய்கிறது.

அமெரிக்க ஆய்வகத்தின் அறிக்கை தொடர்பாக அவர்கள் அதிர்ச்சியும் ஏமாற்றமும் தரும் வகையில் நடந்து கொள்கிறார்கள்" என்றும் கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-7)

## அர்ஜீன் அலோசியஸ் குடும்பத்திற்கு 450 ஏக்கர் தேயிலைத் தோட்டம்?

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய அர்ஜுன் அலோசியஸ் குடும்பத்தினருக்கு. அரசாங்கம் 450 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை குத்தகைக்கு வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டி சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அவரது தந்தை ஜெப்ரி அலோசியஸ் ஆகியோருக்கே இவ்வாறு தேயிலைத் தோட்டம் வழங்கப்பட்டுள்ளது.



நுவரெலியா - கந்தபொல பகுதியிலுள்ள 450 ஏக்கர் காணியே அரசாங்கத்தால் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் இந்தத் தேயிலைத் தோட்டம் வழங்கப்பட்டுள்ளதாகவும், 450 ஏக்கர் தேயிலை தோட்டம் மாதமொன்றுக்கு 8000 ரூபா என்ற அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைப் பெருந் தோட்டத்துறை அமைச்சு இந்தத் தோட்டத்தை கடந்த 2015ஆம் ஆண்டில் வழங்கியுள்ளதாக அந்த செய்தியில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### லசந்த விக்கிரமதுங்க கொலை

## அமெரிக்காவில் கோத்தாவுக்கு எதிராக வழக்கு போடவில்லை

கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்காவில் எந்த வழக்கையும் தாம் தாக்கல் செய்யவில்லை என சண்டே லீடர் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் சகோதரர் தொரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடப்போவதாகவும் அதற்கான முயற்சிகளே இடம்பெற்று வருவதாகவும் சிங்கள ஊடகங்கள் சுட்டிக்காட்டி வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக கோத்தபாயவிற்கு எதிராக அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் சிங்கள ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டன. அத்தோடு இந்த விவகாரம் அவரை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தடையை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியிருந்தன.

இது குறித்து கருத்து தெரிவித்த லசந்த விக்கிரமதுங்கவின் சகோதரரான லால் விக்கிரமதுங்க இதுபற்றி வெளியான செய்திகளை முழுமையாக மறுத்துள்ளார்.

அத்தோடு அமெரிக்க நீதிமன்றத்தில் இதுபற்றி எந்தவொரு வழக்கையும் தாக்கல் செய்யும் திட்டம் தமக்கு இருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், லசந்த கொலைக்குப் பொறுப்பானவர்கள் மீது இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் என்ன நடவடிக்கையை எடுக்கப்போகின்றன என்ற முடிவுக்காக காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இலங்கையில் நிரந்தர தளம் அமைக்கும் திட்டம் இல்லை

### அமெரிக்கா விளக்கம்

இலங்கையுடன் இராணுவ ரீதியான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா முயற்சிக்கின்ற போதிலும், இங்கு நிரந்தரமான தளம் எதையும் அமைக்கும் திட்டம் அமெரிக்காவுக்கு கிடையாது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிரந்தர இராணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா திட்டமிடுவதாக வெளியாகி வரும் செய்திகள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளத்தை நிறுவுவதற்கு எந்தவொரு திட்டமும் இல்லை. அவ்வாறான திட்டம், ஒருபோதும் எமது பாதுகாப்பு ஒத்துழைப்பின் அங்கமாக இருக்கவில்லை.

எதிர்காலத்தில் இங்கு, அமெரிக்காவின் எந்தவொரு நிரந்தர தளத்தையும் நிறுவுகின்ற திட்டங்கள் எதுவும் கிடையாது.

திருகோணமலை துறைமுகத்தில் அமெரிக்க விமானந்தாங்கி கப்பல்கள் எதுவும் தரித்து நிற்கவில்லை. எந்த நேரத்திலும், அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இங்கு வரக் கூடியளவுக்கு இலங்கை அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுகின்றோம்.

எனினும், விமானந்தாங்கிக் கப்பல்கள் எதுவும் இலங்கைக்கு வரும் திட்டம் எதுவும் இல்லை" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பொய்க்குற்றச்சாட்டில் இலங்கை ராணுவத்தை ஒதுக்கி வைக்க முயற்சி!

### கரன்னகொட கவலை

(கொழும்பு)

பொய்யான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இராணுவத்தை ஒதுக்கி வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நேரத்தில், இலங்கைப் படையினருடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள அவுஸ்திரேலியா முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது என்று முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய- இலங்கைப் படைகளுக்கிடையில் கடந்த வாரம் நடந்த கூட்டுப் பயிற்சிகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலங்கையை ஒரு முக்கியமான பாதுகாப்புப் பங்காளராக அவுஸ்திரேலியா அங்கீகரித்துள்ளது.

அண்மையில் அவுஸ்திரேலிய- இலங்கை இராணுவப் பயிற்சிகள் அத்தகைய உறவுகளின் முக்கியத்துவத்தை கோடிட்டுக் காட்டியுள்ளன.

அனைத்துலக கப்பல் பாதையில், விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலை இல்லாதொழிப்பதில் ஆற்றிய பங்களிப்புக்காக இலங்கை கடற்படை பெருமைப்பட முடியும். ஆட்கடத்தல்களை முறியடிக்கும் அவுஸ்திரேலியாவின் முயற்சிகளுக்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது.

பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இலங்கை இராணுவத்தை ஒதுக்கி வைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற நேரத்தில், இலங்கைப் படையினருடன் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள அவுஸ்திரேலியா முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆட்கடத்தல்களுக்கு எதிரான முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவும்-பிரதித் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இலங்கையில் ஆட்கடத்தல்களுக்கு எதிரான முயற்சிகளுக்கு உதவுவதில், அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருக்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடந்த ஆட்கடத்தல் தொடர்பான தரவுகளைத் திரட்டுவது தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கையில் ஆட்கடத்தல்களைத் தடுப்பதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் 3.5 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது.

ஆட்கடத்தல் சம்பவங்களுக்கான தண்டனையை பெற்றுக் கொடுப்பது. நீதி விசாரணையைப் பலப்படுத்துவது. ஆட்கடத்தல் பற்றிய தகவல்களைத் திரட்டுவது, ஆட்கடத்தல்களால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிய சேவையைப் பெற்றுக் கொடுப்பது ஆகிய நான்கு விடயங்களுக்கு இந்த நிதி செலவிடப்படுகிறது.

ஆட்கடத்தல்களைப் பற்றிய தரவுகளை அடையாளம் காணும் திட்டம் முக்கியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

209



தொழிற்கல்வி, தொழில்சார் கல்வி என்பவற்றைப் பொறுத்தவரையில் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அமெரிக்க சிலோன் மிஷனால் மானிப்பாயில் நிறுவப்பட்ட வைத்திய சாலை பின்பு மருத்துவப் பயிற்சி அளித்து ஒரு சிறிய தொகை மாணவர்களை வைத்தியர்களாகத் தகைமை பெற வைத்தது. இவர்கள் பொது வைத்திய அதிகாரிகளாகத் தொழில் புரிந்தனர்.

மருத்துவக் கலாநிதி சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்களே மானிப்பாயில் முதல் மருத்துவக் கல்லூரியை நிறுவியவர். இக்காலகட்டத்தில் அமெரிக்கச் சிலோன் மிஷன் தெல்லிப் பழையிலும் கொழும்பகமவிலும் (கொழும்புத்துறை) தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் தாபித்தது.

இங்கு மாணவர்களின் செய்முறைக் கல்விப் பயிற்சிக்காக நீராவிச் சக்தியில் இயங்கும் இயந்திரங்களும் வேறு இயந்திரத் தொழில் உபகரணங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

தளபாடம் செய்தல், உலோகத் தொழில், புத்தகம் கட்டுதல், அச்சுக்கலை,மேசன்கலை, தோல் பதனிடல் என்பன இங்கு வழங்கப்பட்ட கல்வியின் பிரதான துறைகளாக இருந்தன.

நவீன விவசாய முறைகளை நடைமுறைப்படுத்தி மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசாங்க ஊக்குவிப்புடன் விவசாயப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

இந்தக் கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலும் முல்லைத் தீவிலும் மட்டக்களப்பிலும் அமைந்திருந்தன. வடக்கிலே மருத்துவ சட்டக் கல்லூரிகளும் முறையே 1870 இலும் 1874 இலும் நிறுவப்பட்டு சிறிய தொகையினர் வழக்கறிஞராகவும் வைத்தியராகவும் கல்விபெற வாய்ப்பளிக்கப்பட்டது.

1931 இல் கொழும்பில் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்படும் வரை பூரண அந்தஸ்துக் கொண்ட பல்கலைக் கழகங்களை இலங்கையில் அமைக்கும் எண்ணம் எழவில்லை என்பது இங்கு கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி ஈற்றில் 1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகமாயிற்று.

"மருத்துவக் கலாநிதி சாமு வேல் பிஸ்க் கிறீன் அவர்களே மானிப்பாயில் முதல் மருத்துவக் கல்லூரியை நிறுவியவர். இக்காலகட்டத்தில் அமெரிக்கச் சிலோன் மிஷன் தெல்லிப்பழையிலும் கொழும்பகமவி லும் (கொழும்புத் துறை) தொழில்நுட்பக் கல்வி நிறு வனங்கள் தாபித்தது. இங்கு மாணவர்களின் செய்முறைக் கல்விப் பயிற்சிக் காக நீராவிச்சக்தியில்இயங்கும்இயந்திரங்களும் வேறு இயந்திரத் தொழில் உபகரணங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

ஆயினும் இந்த முன்னேற்றத்துக்கு முன்னதாக தமிழரின் கல்வி முன்னேற்றம் ஓரளவுக்கு சீர்பெற்றது என நாம் சொல்லக் கூடியதாக இருந்தபோதும் கல்வியின் நலன்கள் குறிப்பாக உயர்கல்வி நலன்கள் மக்கள் அனைவருக்குமே கிடைத்தன எனக் கொள்ள முடியாது. இந்த ஆரம்ப நிலைகளில் கல்வி முன்னேற்றம் தமிழ்ச் சமூகத்தில் ஒரு உயர் மட்டத்தினரைத் தோற்றுவித்ததென நாம் கூற முடியும்.

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் (இந்தியாவிலும் இங்கிலாந்திலும்) தமிழர் பெற்ற கல்வி பின்னர் தமது சமூகத்தையும் நாட்டையும் மேலும் மேம்படுத்துவதற்கு அதன் இளைய தலைமுறையினர் வாயிலாக நவீன மேற்கத்தேய சிந்தனைகளையும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறைகளையும் பயன்படுத்தத் தொடங்கியது.

அவர்கள் சாதனைகள் தமிழ் மக்களினதும் நாடு முழுவதற்குமான சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. இக்கல்விச் சாதனைகளினால் ஏற்பட்ட இன்னுமொரு தாக்கம் என்னவெனில் நாம் முன்பு பார்த்தது போன்று தமிழர் மத்தியில் காணப்பட்ட மற்றைய உயர் மட்டங்களுடன் மேலும் ஓர் உயர்மட்டம் உருவாக்கப்பட்டமை ஆகும்.

இதைப்போன்றே சுயமொழிக் கல்வித் திட்டமும் தமிழர் மத்தியில் ஓர் உள்ளூர் உயர் மட்டத்தை உருவாக்க ஆங்கிலக் கல்வி பெற்ற உயர்மட்டத்தினர் இலங்கை முழுவதிலும் வெளிநாடுகளிலும் பரவித் தமது சொந்தப் பொருளாதார, தொழில்சார் சுபீட்ச நலன்களில் அக்கறை கொண்டிருந்தனர். இந்த உயர் மட்டத்தினரின் உருவாக்கம் பிரித்தானியரின் பங்களிப்பாகும்.ஏனெனில் இவர்களே இலங்கைத் தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பெரும் பங்கை வகித்தவர் ஆவர்.

இந்தக் காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்த உயர் மட்டத்தினரின் தமது வகுப்பு அந்தஸ்தையும் பெருமையையும் நிலை நிறுத்திக் கொள்வதற்காக தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பதிலாக பிரித்தானிய ஆட்சியினருக்கு விசுவாசமாகவும் தம்மையொத்த சிங்களவர்களுடன் சுமுகமான உறவுகளைப் பேணுபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

கல்வியில் அடைந்த முன்னேற்றம் தமிழரைச் சிங்களப் பிரதேசங்களிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற ஊக்குவித்தது.

இந்த நிலை யாழ்ப்பாணத்தின் மேலதிக சனத்தொகையை உள்வாங்கியது மட்டுமன்றி அரச, தனியார் இரு துறைகளிலுமே சிவில் எழுதுவினைஞர் பதவிகளில் பணிபுரிய அவர்களுக்கு வாய்ப்பளித்தது.

இந்த நிலைமை 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழரின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

### தொழில்

19 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டுகளில் பொது வேலைகளும் அரசாங்க செயற்பாடுகளிலும் ஏற்பட்ட பெரும் அதிகரிப்பின் காரணமாக பல்வேறு அரசாங்கத் திணைக்களங்கள் உருவாகின.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர்களை தோட்டங்களின் முதலாளிகளாக மாற்ற வேண்டும்

## வடிவேல் சுரேஷ் கூறுகிறார்



(பதுளை)

இளைஞர்களையும் தொழிலாளர்களையும் பெருந்தோட்டங்களின் முதலாளிகளாக உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "இன்று இலங்கைக்கு தேயிலை உற்பத்தியில் 75 சதவீதமான வருமானம் சிறுதேயிலை உற்பத்தியாளர்களிடம் இருந்தே கிடைக்கின்றது. பெருந்தோட்டங்களில் இருந்து 25 சதவீதமான வருமானமே கிடைக்கின்றது.

தற்போது இலங்கையில் சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி அடைவதற்குக் காரணம் முயற்சியாளர்களின் அக்கறையும் அரசாங்கத்தின் பல்வேறு உதவித் திட்டங்களுமாகும்.

இந்நிலை பெருந்தோட்டங்களிலும் நிலவ வேண்டுமானால் பெருந்தோட்டக் காணிகளை மலையக இளைஞர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பிரித்து கொடுத்து அவர்களையும் முதலாளிகளாக ஆக்குவதே சிறந்தது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 302 பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கவும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள 302 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப மூன்று மாத காலக்கெடு கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொதுச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உரிய முறைமைகளைப் பின்பற்றாது அதிபர் வெற்றிடங்களுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு கல்வி அமைச்சால் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அதிபர் பெயர் பட்டியலை பொது சேவைகள் ஆணைக்குழு நிராகரித்ததாக ஆணைக்குழுவைச் சேர்ந்த கல்விச் சேவைக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் தேசிய பாடசாலைகளிலுள்ள அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு மீள் விளம்பரம் செய்து மூன்று மாத காலத்திற்குள் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. (இ-7)

# கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவுடன் பாலஸ்தீன தூதுவர் கலந்துரையாடல்



(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட பாலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலாநிதி ஹைர் எம்.எச். லைட் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை காத்தான்குடிக்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

காத்தான்குடி அலுவலகத்திற்குச் சென்ற தூதுவருக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாலஸ்தீனத் தூதர் கிழக்கு மாகாண ஆளுநருடன் காத்தான்குடி பூர்வீக நூதனசாலைக்கும் புதிய காத்தான்குடி அல்-அக்ஸா பெரிய பள்ளிவாசலுக்கும் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

இதன்போது ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்வால் தூதுவர் ஹைருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ-7)

# 915 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை

## அமைச்சர் வஜிர தகவல்



(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிரஜைகள் 915 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, டென்மார்க் மற்றும் சுவீடன் உள்ளிட்ட நாடுகளில் பிரஜாவுரிமை பெற்றுள்ள இலங்கைப் பிரஜைகளுக்கே இவ்வாறு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் முறைமை கடந்த 1987 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதி வரை 36,995 பேருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1684


### சங்கவி

வாழ்க்கையில் நீ மேலே உயரும் போது நீ யார் என்று நண்பர்கள் அறிவார்கள்...! நீ கீழே போகும் போது உண்மையான நண்பர்கள் யார் என்று நீ அறிவாய்...!



### சஞ்சய்

எவ்வளவுதான் உறவுகளுக்காக அனுசரித்து வாழ்ந்தாலும் சில தருணங்களில் நாம் நமக்காக வாழ்ந்திருக்கலாம் என்ற விரக்தியை நம் உறவுகளே நமக்கு புகுத்தி விடுகிறார்கள்



### அங்கவி

யாழ்ப்பாணம் பத்து வருட சவால்






### ஜெனனி



நம்மைச் சிரிக்க வைக் கிறவர்கள் ஒருநாள் நம்மை கட்டாயம் நொந்து நூறாகி அழ வைச் சிடுவாங்க

### சபிதா

என் குணம் என் எதிரில் நிற்பவனின் குணத்தைப் பொறுத்தது



### லதுமி

மனம் பக்குவப்பட்டால் பாதை தெளிவாகும் பாதை தெளிவானால் பயணம் எளிதாகும் பயணம் எளிதானால் வாழ்க்கை இனிதாகும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீரிலிருந்து வெளிவந்த புத்தர் பார்க்க மக்கள் படையெடுப்பு





(கொத்மலை)

கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளமையால் நீரில் மூழ்கியிருந்த வணக்கஸ் தலங்கள் தென்பட ஆரம்பித்துள் ளன. அதனை பார்வையிடுவதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக மலையகம் உள்ளிட்ட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வறட்சியான காலநிலை நிலவி வருகின்றது. இதன் காரணமாக நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது.

அந்த வகையில் 1979ஆம் ஆண்டு கொத்மலை அணைக்கட்டு நீர்மாணிக்கப்பட்டபோது பழமை வாய்ந்த வரலாற்று சிறப்புமிக்க விகாரை மற்றும் ஆலயம் என்பன நீரில் மூழ்கியிருந்தன.

இந்நிலையில் தற்போது நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளமையினால், நீரில் மூழ்கியிருந்த குறித்த விகாரையிலுள்ள புத்தர் சிலைகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

இதனை பார்வையிட பொது மக்கள் பலர் திரண்டுள்ளதோடு ஒளிப்படங்களையும் எடுத்துச் செல்கின்றனர். (இ-7)

# திமுத் கருணாரத்னவின் பொலிஸ் பிணை பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு



(கொழும்பு)

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணித் தலைவர் திமுத் கருணாரத்னவுக்கு பொலிஸ் பிணை வழங்கப்பட்ட சம்பவம் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்துக்குள்ளாக்கியமை மற்றும் விபத்துக்குள்ளாகிய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை ஆகிய காரணங்களை வைத்து அவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதே சிறந்தது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை திமுத் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்படும் போது போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹணவிடம் தெரிவிக்கப்படவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் விபத்துக்குள்ளாகிய நபர் மேலதிக விசாரணை தேவையில்லை என வாக்குமூலம் வழங்கியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி. லால்காந்த மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பொலிஸ் அதிகாரியை மோதிச் சென்ற டிபென்டர் சாரதி பிணையில் விடுவிப்பு

(பொரள்ளை)

பொரள்ளை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியை டிபென்டர் ரக வாகனத்தில் மோதிவிட்டு தப்பிச்சென்ற சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

டிபென்டர் வாகனத்தைச் செலுத்திய நவிந்து ரத்நாயக்க என்பவரே இவ்வாறு 5 இலட்சம் ரூபா சரீர பிணைகள் இரண்டின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் 8 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் அதில் ஏழு பேர், 5 இலட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொரள்ளை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 5 ஆம் திகதியாகும். போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை தினமான எதிர்வரும் 29 ஆம் திகதி வழங்கப்படும். (5)

## மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபப் பெண் படுகாயமடைந்துள்ளார். நாவற்குழி மேற்கு கைதடிப் பகுதியைச் சேர்ந்த இ.சற்குணலக்சுமி (வயது-70) என்ற வயோதிபப்பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, சாவகச்சேரி கேரதீவு வீதியில் உள்ள குட்டிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் நடந்து சென்ற வேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (5-10)

## அமைச்சர் சஜித்திற்கு விருது



(கண்டி)

வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு மல்வத்து பீடம் "சாசன தீபத அபிமானி லங்கா ஜனரஞ்சன" அதி உயர் கௌரவ விருது வழங்கி கௌரவித்தது. இந்நிகழ்வு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பங்களிப்புடன் கண்டி மல்வத்து விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 110 | 80 | 100 |
| தக்காளி | 60 | 70 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 90 | 100 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 80 | 120 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 100 | 80 | 70 | 60 |
| வாழைக்காய் | 60 | 120 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 70 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 300 | 300 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 35 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 160 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 120 | — | 160 |
| முள்ளங்கி | 60 | 70 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | — | — | 110 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

# முரட்டுக்குதிரை!



பண்டைய காலத்தில் கிரேக்க நாடு உலகத்திலேயே நாகரிக வளர்ச்சியும் கலை மேம்பாடும் வீரச் சிறப்பு பெற்று உலகம் சிறக்கத் திகழ்ந்தது. பிலிப் என்ற மன்னன் கிரேக்க நாட்டை ஆண்டு வந்தான்.

வீரதீர மேம்பாட்டிலும் உயர்ந்த கொடைத்திறனிலும் கலை கலாசார அறிவிலும் மேம்பட்டுத் திகழ்ந்தான் பிலிப் மன்னன். அவனுடைய அரசவையில் வீர தீர விளையாட்டுகளுக்கு பஞ்சமிருந்ததில்லை. கலை கலாசார நிகழ்ச்சிகளுக்கும் குறைவு இருந்ததில்லை.

ஒரு தடவை மன்னனின் அவைக்கு அயல்நாட்டிலிருந்து குதிரை வீரன் ஒருவன் வந்திருந்தான். தம்மிடம் குதிரை ஒன்று இருப்பதாகவும் அதன் திறனைப் பரிசோதித்து நல்ல விலைக்கு வாங்கிக் கொள்ளுமாறும் அரசனை வேண்டிக் கொண்டான்.

"திறனைப் பரிசீலிக்கும் அளவுக்கு அந்தக் குதிரை அவ்வளவு முக்கியம் வாய்ந்ததா?" என்று வியப்புடன் மன்னன் வினவினான்.

"பெருவலிமையும் அறிவாற்றலும் மிக்க அந்தக் குதிரை சற்று முரட்டுத்தனமானது. அதை அடக்கக் கூடிய வல்லமை படைத்தவர்கள் இந்த அவையில் இருக்கின்றனரா? என்று தெரிந்து கொண்டால்தான், அந்தக் குதிரையை வாங்குவது பயனுடையதாக இருக்கும் என்பதற்காகச் சொன்னேன்!" என்றான் குதிரை வீரன்.

"ஒரு குதிரையை அடக்குவது அவ்வளவு சிரமமான செயலா? அதையும்தான் பார்த்துவிடுவோம். குதிரையைக் கொண்டு வாரும்!" என்று மன்னன் உத்தரவிட்டான்.

அரசவைக்கு எதிரேயிருந்த விசாலமான திறந்தவெளியில் குதிரையைக் கொண்டு வந்து நிறுத்தினான் குதிரை வீரன். கறுப்பு நிறத்துடன், கம்பீரமான தோற்றத்துடன், நிமிர்ந்து நின்றது குதிரை. குதிரையின் தோற்றம் அனைவரையும் அச்சுறுத்துவதாக இருந்தது.

பிலிப் மன்னன் தமது அவையில் அமர்ந்திருந்த வீரர்களை நோக்கி, "இந்தக் குதிரையை அடக்கக் கூடிய வீரர் நம்மிடம் இல்லையா?" என்று வினவினான்.

ஒரு வீரன் ஆவேசத்துடன் எழுந்தான். அலட்சியமாகக் குதிரையிடம் நெருங்கினான். கம்பீரமாக அதன் பக்கம் சென்று அந்தக் குதிரையைத் தொட்டான். அவ்வளவுதான். குதிரை பயங்கரமான கனைப்புடன் தன் முன்னங்கால் இரண்டையும் தூக்கி வீரனை ஒரே அழுத்து அழுத்தி வீழ்த்திவிட்டது.

மிகுந்த பலசாலி என்றும், துணிச்சல் மிக்கவன் என்றும் போற்றப்படும் மற்றொரு வீரன் எழுந்தான். அவன் சற்று எச்சரிக்கையுடன் குதிரையை நெருங்கினான். அவன் நினைத்த மாதிரி அவ்வளவு எளிதாக குதிரையைச் சமாளித்துவிட முடியவில்லை. அது தாறுமாறாக இரண்டு கால்களையும் தூக்கிவைத்து தன் மீது அமர்ந்திருந்த வீரனை நாலைந்து தரம் உலுக்கிக் கீழே தள்ளிவிட்டது. அவன் படுகாயம் அடைந்து கீழே உருண்டான்.

அவனைத் தொடர்ந்து நான்கு ஐந்து வீரர்கள் குதிரையை நெருங்கினர். ஆனால், அந்த முரட்டுக் குதிரையை அடக்கச் சக்தியற்று அது செய்த அமர்க்களத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் கீழே விழுந்து படுகாயப்பட்டுத் திரும்பினர்.

அரசனுக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. "இந்த அரசவையில் குதிரையை அடக்கக்கூடிய வீரன் ஒருவன் கூட இல்லை என்பது வெட்கப்படக் கூடிய ஒன்றாகும். கேவலமாகும்!" என்று சினம் கொப்பளிக்க மொழிந்தான்.

அந்தச் சமயம் அரசனின் மகன் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு, தன் தந்தையின் அருகே அமர்ந்திருந்தான். அவனுக்கு இருபது வயதுக்குள் தான் இருக்கும். மன்னன் மகன் தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து தந்தையை வணங்கி, "தந்தையே! எனக்கு உத்தரவு கொடுத்தால் இந்தக் குதிரையை அடக்க முயற்சி செய்து பார்க்கிறேன்!" என்றான்.

மன்னவன் தன் மகனை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தான். "வழக்கமாக குதிரையுடன் பழகும் வீரர்களாலேயே இந்தக் குதிரையை அடக்க முடியவில்லை என்றால், உன்னால் மட்டும் அடக்க இயலுமா?" என்று கேட்டான்.

"நமது வீரர்களைவிட உயர்ந்தவன் என்று நான் கூறிக் கொள்ளவில்லை. ஒரு தடவை முயற்சி செய்து பார்க்கிறேன் என்று தான் கூறுகிறேன்!" என்றான்.

மகனால் அந்த குதிரையை அடக்க முடியும் என்ற நம்பிக்கை மன்னருக்கு இல்லாவிட்டாலும் மகனின் ஆசையை ஏன் தடுக்க வேண்டும் என்று எண்ணி அனுமதி கொடுத்தான்.

இளவரசன் அந்தக் குதிரையை நோக்கி, அதன் தோற்றத்தையும் அது நின்றிருந்த நிலையையும் ஒரு தடவை கண்ணோட்டம் விட்டான். பிறகு அந்தக் குதிரையை நெருங்கி, அதன் கடிவாளத்தைப் பற்றி சூரியன் இருக்கும் பக்கம் அதன் முகம் இருக்குமாறு திருப்பி நிறுத்தினான்.

பிறகு சட்டென்று குதிரை மீது பாய்ந்து ஏறினான். குதிரை சற்று அதிர்ச்சியடைந்தது போலத் தடுமாறியது. இளவரசன் கடிவாளத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அது நின்றிருந்த நிலையிலிருந்து திரும்பாமல் இருக்குமாறு எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டான்.

குதிரை இரண்டொரு தடவை துள்ளிக் குதித்தது. ஆனால், மற்றவரிடம் நடந்து கொண்டதைப் போல அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொள்ளவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு குதிரை அமைதியடைந்து விட்டது.

பிறகு இளவரசன் குதிரையைச் செலுத்தி அந்த மைதானத்தை ஒரு தடவை வலம் வந்து பிறகு குதிரையை விட்டுக் கீழிறங்கினான்.

மன்னன் மட்டுமன்றி, அங்கிருந்த அனைவருமே அந்தக் காட்சியைக் கண்டு பிரமிப்பு அடைந்தனர். "வலிமையும் வீரமும் மிக்க வீரர்களாலேயே முடியாத சாதனையை இளவரசன் மட்டும்எவ்வாறு சாதித்தான்" என்று எல்லாரும் அதிசயப்பட்டனர். மன்னன் அந்த குதிரைக் குத் தக்க விலை கொடுத்து விட்டான்.

அன்று மாலையில் அரண்மனைப் பூந்தோட்டத்தில் மன்னன் தமது குடும்பத்தினருடன் உலாவிக் கொண்டிருந்தான்.

அப்போது இளவரசனை நோக்கி, "மகனே! மற்ற வீரர்கள் அடக்க மிகவும் சிரமப்பட்ட குதிரையை உன்னால் மட்டும் எவ்வாறு அடக்க முடிந்தது?" என்று வினவினான்.

இளவரசன்மன்னனை நோக்கி, "தந்தையே! அந்தக் குதிரையின் செயற்பாட்டை கூர்ந்து பார்த்ததில் ஓர் உண்மையைக் கண்டு கொண்டேன். அந்தக் குதிரை இயல்பாகவே சற்று முரடாக இருந்தாலும் அது தரையில் விழும் தனது நிழலைக் கண்டு ஒருவித மிரட்சியும் வெறியும் அடைந்து விடுகிறது.

"அதைக் கண்டு கொண்ட காரணத்தால்தான் நான் குதிரையைச் சூரியன் இருக்கும் திசைப் பக்கம் அதன் முகம் இருக்கும் விதத்தில் திருப்பி நிறுத்தினேன். நான் நினைத்தது சரியாக ஆகிவிட்டது. குதிரைக்கு தன் நிழலைக் காண வாய்ப்புக் கிடைக்காததால அது மிரட்சி அடைவதனின்றும் தடுக்கப்பட்டது. அதன் பிறகு, அதை அடக்குவது எளிதாயிற்று. குதிரைக்காரன் வேண்டுமென்றே தான் குதிரையைத் திருப்பி நிறுத்தியிருந்தான்.

"அவன் தந்திரத்தை முறியடித்த காரணத்தால்தான் எனக்கு வெற்றி கிடைத்தது!" என்று கூறினான் இளவரசன். உடல் வலிமையைவிட மனவலிமையே உயர்ந்தது என்பதை நிரூபித்துக் காண்பித்த தமது புதல்வனை பிலிப் மன்னன் பெரிதும் பாராட்டினான்.

இவ்வாறு சின்ன வயதிலேயே தன் அறிவு பலத்தையும் உடல் வலிமையையும் நிரூபித்துக் காண்பித்த அந்த சிறுவன்தான் பிற்காலத்தில் மகா அலெக்சாண்டர் என்ற பெயரில் உலகப் புகழ்பெற்றான். மிகவும் இளம் வயதிலேயே நாட்டின் மன்னனாகப் பொறுப்பேற்ற அலெக்சாண்டர் எகிப்து, பாரசீகம் போன்ற பெரிய நாடுகளை வென்று அந்த வெற்றிப் பெருமையோடு பாரதம் வந்தான். பாரதத்தில் அவனால் முழுவெற்றி காண முடியாவிட்டாலும் தனது வீரதீர பராக்கிரமத்தை நிலைநாட்டிவிட்டுத் தன் தாயகம் திரும்பிச் சென்றான்.

## விடுகதைகள்

• படபடக்கும், பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?
பட்டாசு.

• தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?
அன்னாசிப்பழம்.

• நிலத்தில் முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி அது என்ன?
முடி.

• எவ்வளவு ஓடினாலும் எனக்கு வியர்வை வராது. வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது அது என்ன?
நாய்.

• கையை வெட்டுவார் கழுத்தை வெட்டுவார். ஆனாலும் நல்லவர். யார் அவர்?
தையல்காரர்

## நட்பு

• ஒருவருடன் நட்புக் கொள்ளுமுன் நன்றாக யோசித்து அவருடன் நட்புக்கொள். அந்த நட்பை விலக்க விரும்பினால் மேலும் நன்றாக யோசனை செய்தபின்னரே அதனை நடைமுறைப்படுத்து!

**- பிராங்ளின்**

• உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை.

**- [illegible]**

## அறிந்துகொள்வோம்

• அவுஸ்திரேலியாவில் இதய வடிவிலான பவளப்பாறை உள்ளது.

• லாப்ஸ்டர் என்ற கடல்வாழ் உயிரியின் பல் அதன் வயிற்றில் உள்ளது.

• உடல் வெப்பநிலை 106 டிகிரி ஃபாரனீட்டை எட்டும் வரை ஒட்டகத்துக்கு வியர்க்காது.

• டால்பினால் தன்னைத் தானே கண்ணாடியில் அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

• அமெரிக்க 100 டொலர் நோட்டில் உள்ள கடிகாரம் காட்டும் நேரம் 4:10.

• உருளைக்கிழங்கைப் பயன்படுத்தி பட்டரி உருவாக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏது மில்லை நடந்ததையே நினைத்திருந்தால் அமைதி என்றுமில்லை. – *கவியரசு கண்ணதாசன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியலில் நடப்பது என்ன?

*ஏமாற்றாதே ஏமாறாதே...* என்பது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த அடிமைப் பெண் என்ற சினிமாப் படத்தில் வரும் பாடல் வரிகளாகும்.

நம்ப நட, நம்பி நடவாதே என்ற பழமொழியைப் புதுப்பித்து கவிஞர் வாலி கொடுத்த புதுவடிவமே மேற்போந்த பாடலாகும்.

ஏமாற்றுதல் மிக மோசமான கொடுஞ்செயல். அதிலும் நம்ப வைத்து ஏமாற்றுதல் என்பது நம்பிக்கைத் துரோகம் என்பதன் பாற்பட்டதாகும்.

நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் ஏழு பிறப்புக்கும் தங்கள் பாவத்தை கழுவாய் செய்ய மாட்டார்கள் என்று சமய தத்துவங்கள் கூறிநின்றாலும் இன்னமும் நம்ப வைத்து ஏமாற்றுகின்ற நாடகங்கள் மனித சமூகத்தில் நடக்கவே செய்கிறது.

அதிலும் ஏமாற்றுகின்ற வடிவங்கள் வேறுபட்டவையாக இருப்பதுதான் விசித்திரம். இப்போதெல்லாம் ஏமாற்றுகின்றவர்கள் தொலைபேசி, மின்னஞ்சல் உள்ளிட்ட தகவல் தொடர்பாடல் முறைகளினூடு ஏமாற்றுகின்றனர்.

உங்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் பணம் அதிர்ஷ்டத்தின் மூலம் கிடைத்திருக்கிறது. அதைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னதாக ஐம்பதாயிரம் ரூபாயை எமக்கு அனுப்பி வையுங்கள் என்றவாறான ஏமாற்றுத்தனங்களுக்குக் குறைவே இல்லை.

என்ன செய்வது ஏமாறுபவர்கள் நம் மத்தியில் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களும் நம்மோடு இருக்கவே செய்வர்.

இது ஒருகதை. ஒரு நாட்டு மன்னனை ஒருவன் சந்தித்தான். மன்னா நான் அயல் நாட்டில் வசிக்கும் நெசவாளி. மிகத் தரமான ஆடைகளை நெய்யும் திறன் என்னிடம் இருக்கிறது. நீங்கள் அனுமதித்தால், உங்களுக்கு மிகவுயர்ந்த தரத்தில் ஆடை நெய்து தருவேன் என்றான்.

நெசவாளியை நம்பிய மன்னன் ஆடை தயாரிப்புக்காகப் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்தான்.

சில மாதங்கள் ஆகிய பின்பு மீண்டும் அந்த நெசவாளி மன்னனிடம் வருகிறான். வரும் போது கையில் எதையோ ஏந்தி வைத்திருப்பது போன்ற பாவனையில் கையை வைத்திருந்தான்.

மன்னா உங்களுக்கான ஆடை தயாராகி விட்டது. இதில் நவரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு முக்கிய விடயம் உண்டு.

இந்த ஆடையானது அறிவாளிகளுக்கும் நல்லவர்களுக்கும் மட்டுமே தெரியும் என்றான்.

நெசவாளி கூறிய அந்த விடயத்தை மன்னர் சபையில் இருந்த மந்திரி பிரதானிகளும் செவிமடுத்தனர்.

என் கையில் வைத்திருக்கும் இந்த மிக உயர்ந்த பெறுமதியான ஆடை எப்படியிருக்கிறது மன்னா என்று கேட்டான் நெசவாளி.

மன்னனுக்கு ஆடை தெரியவே இல்லை. இருந்தும் நல்லவர்களுக்கும் அறிவாளிகளுக்கும் மட்டுமே அந்த ஆடை தெரியும் என்று ஏலவே நெசவாளி கூறியதால், ஆடை பிரமாதம் என்றான் மன்னன்.

மன்னனைப் போலவே அமைச்சர்களுக்கும் அந்த ஆடை கண்ணுக்குத் தெரியவில்லையாயினும் அவர்களும் மிகச் சிறந்த ஆடை எனக் கூறினர்.

இப்போது மன்னனுக்கு ஆடை அணிவிக்கப்படுகிறது. அந்தோ! ஆடையின்றி மன்னன் நிர்வாணமாகக் காட்சி தருகிறான்.

அனைவருக்கும் மன்னன் நிர்வாணமாக நிற்பது தெரிகிறது. இருந்தும் ஆடை தெரியாவிட்டால், அறிவற்றவர் என்றும் நல்லவர் அல்ல என்றும் ஆகி விடும் என்பதால் எல்லோரும் ஆடை பிரமாதம் என்று கூறினர்.

மன்னனை வீதி உலா கொண்டு செல்கின்றனர். அந்தவீதியில் ஆடுமேய்த்துக்கொண்டு நின்ற சிறுவன் ஒருவன் மன்னனைப் பார்த்து விட்டு, இங்கே பாருங்கள் மன்னர் நிர்வாணமாகப் போகிறார் என்றான்.

அப்போதுதான் நிலைமை புரிந்தது. இதுதான் எங்கள் தமிழ் அரசியலில் இப்போது நடக்கிறது.

# தேசிய அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை
# ஐ.தே.கவுடன் இணையமாட்டோம்; அடம்பிடிக்கும் சு.க.முக்கியஸ்தர்கள்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

பதுளையில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான்பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம்ஒன்றை மீண்டும் அமைப்பதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டிணையாது.

யாரை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்வது என்பது குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் இதுவரையில் தீர்மானம் எடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரின் பெயரை அறிவிக்கும் வரை, தமது ஜனாதிபதி வேடபாளரின் பெயரை வெளியிடப் போவதில்லை எனவும டிலான பெரேரா தெரிவித்தார். (இ-7)

## குருபூசை தினம்

கந்தர்மடம் குமாரசாமி வீதி வேதாந்தமடமகாதேவா சுவாமிகள் ஆச்சிரம ஸ்ரீ சிவகுருநாத குருபீட ஸ்ரீமத்சாஜன்சுவாமிகளின் வருடக் குருபூசை இன்று 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல்11மணியளவில் இடம்பெறும். (5)

### யாழ்.பல்கலைக்கழகத்தில்
## வரவு பதிவு செய்யும் இயந்திரம் சேதமாக்கப்பட்டுள்ளது
### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் வரவு பதிவிடும் இயந்திரங்கள் சேதமாக்கப் பட்டதாக யாழ்.பல்கலைக் கழகப் பதிவாளர் எஸ்.காண்டீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றுக் காலை பல்கலைக்கழகத்தினுள் பொருத்தப்பட்டுள்ள கைவிரல் அடையாளத்தை உறுதி செய்யும் 3 இயந்திரங்கள் மீது ஒயில் ஊற்றப்பட்டு சேதமாக்கப்பட்டது.

சமபவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதுடன் யாழ.பல்கலைக்கழக நிர்வாக ரீதியிலும் விசாரணைகள் முனனெடுககப்படும்என அவர்மேலும தெரிவித்தார். (ம-10,101)

## பிரான்ஸ் தூதுவருடன் யாழ்.மாநகர முதல்வர்
### இம்மானுவேல் ஆனல்ட் சந்திப்பு

(யாழ்ப்பாணம் )

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டின் தூதுவர் எரிக் லவட்யுஸ் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட்டை சந்தித்து கலந்துரையாடினார.

யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பில் யாழ்.மாநகர அபிவிருத்தி மற்றும் தற்கால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

சுமார்ஒரு மணிநேரம்இந்த சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பில், அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த பிரான்ஸ் அரசாங்கம் பல உதவித்திட்டங்களை வழங்குவதாகவும் தூதுவர் உறுதியளித்தார். (ம-101)

## க.பொ.த. (சா/தர) பெறுபேறுகள்-2018

<u>யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி</u>

9ஏ

சு.மயூரகி, ச.கோபிகா, கு.தர்மீகன், ஜெ.நிதுர்சிகா, பி.சுஜீபன், ஞா.கோகுலன், உ.சனாதனன், சி.சிவன்ஜா

8ஏபி

அ.பானுஜன், கு.மதூசன், சி.மனோஜன், ச.பத்மப்பிரியன, ஜ.சஞ்சயன், க.திவீசன், சி.டிலக்சனா, ரு.பிருந்தா, க.சாமந்தி

8ஏசி

க.கவிஸ்ரன், சி.லிகிதரன, ந.விதுசன்

8ஏஎஸ்

கி.செந்தூரன்

7ஏ2பி

பி.ரொமேஷ், த.ஜேம்சன்

7ஏபிசி

சி.தயானுஜன், க.அருணன், வ.துஸ்யந்தன், சு.துசானி, ந.சனுஸ்ரன்

7ஏபிஎஸ்

பி.யதுசனன்

6ஏ3பி

த.கஜபானுஜன், ர.சோபதர்சன், ப.தாமிரன், ந.லக்ஷன், ச.தரணியா, ச.சர்வாணி

6ஏ2பிசி

பு.அபிநாத், சி.மிதுஜனா, உ.சோபிகன், க.அபிர்தன், வை.சானுகா, ர.ஜனார்த்தன்- 6ஏ2பி, சி.விசாலினி-6ஏபி2சி, ர.பிதுஷன்-6ஏ2சிஎஸ், ஈ.ரேணுசன்-6ஏபிசிஎஸ், ப.ஜஙகரன்-5ஏ4பி, வி.விதுஸ், ச.சாருஜா-5ஏ3பிசி, கு.பவித்ராகிதன், சி.சிந்துஜா-5ஏ3பிஎஸ், க.கருசனன், ஜெ.கிருசிகா-5ஏ2பி2சி, க.மதுசன்-5ஏ2பிசிஎஸ், ஜெ.ஜெலக்சன்-5ஏபி3சி, இ.டிலக்சனா-5ஏபி2சி

<u>யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்</u>

த.ஜெமீமா-6ஏ3பி, தி.இந்துஜன்-6ஏ2பிசி, சு.பானுஜன- 5ஏ3பிசி, யோ.லொக்சனி-5ஏ2பிசிஎஸ், ச.பிதுஷா-5ஏபி2சிஎஸ், ச.சுமர்தா-5ஏபி2சி, ந.தாட்ஷாஜினி-4ஏபி3சி

<u>கிளி/ தர்மக்கேணி அ.த.க.பாடசாலை</u>

அ.லக்சிகா-5ஏபி2சி, ச.கரன்ஷா- 4ஏபி2சி2எஸ், ர.சுதர்சனா-3ஏ3பிசிஎஸ், ச.கரணீகா-3ஏ2பி3சி, லோ.கேதுஜன்-3ஏபி3சிஎஸ், ஜெ.யதுர்சா-2ஏ2பி4சி, க.நிருஷாந்-2ஏ2பி4சி, வே. கோநிலவன்- 2ஏ3சி3எஸ், தி.பேரரசி-2பி3சி3எஸ், தி.தமிழமுகன்-5சி2எஸ்.

## ஸ்தாபகர் தினமும் பரிசில்நாள் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் நாள் நிகழ்வும் நாளை 3ஆம் திகதி புதனகிழமை காலை 9 மணியளவில் கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைககழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.பால்ராஜ், முனனாள்வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி இ.ஜெயந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜாவும் பரிசில்களை யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை ஆசிரியர் திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் வழங்குவர். (5)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்
### உற்பத்தி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)


சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக இலக்கியப் போட்டிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மற்றும்சிரட்டைமுருகைக கல் கைவினைப் பொருள உற்பத்தி உபகரணங்கள் வழங்கல் நிகழ்வும் நாளை 3ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி தலைமையில் நடைபெறும். இதில் பிரதேச சபைத் தவிசாளர் பி.பற்றிக் றொசான், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்பணி. எமில் போல், நெடுந்தீவு இந்து மதகுரு பிரம்மஸ்ரீ கா.புவனேந்திர சர்மா, கௌரவ விருந்தினராக நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஏ.அருந்தவசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)


## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனித உடல்தான் உலகத்திலேயே மிகச்சிறந்த உடலாகும். மனிதனே மேலான ஜீவன். எல்லா மிருகங்களையும் தேவர்களையும் காட்டிலும் உயர்ந்தவன். இந்தப் பிறவியை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- உனக்குள் இருக்கும் ஆற்றல் மக்களுக்கு பயன்படும் வகையில் அமைய வேண்டும். வேறு எவரும் உனக்கு கற்பிக்கவும் முடியாது. ஆன்மிகவாதி ஆகிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத்தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.
- எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே நல்லவைகளையே விதைக்க கற்றுக்கொள்வோம்.
- [illegible] போல, தகுந்த சந்தர்ப்பம் வரும்போது அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சித்திரை வருட பிறப்பை முன்னிட்டு, கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து யாழ்.கருகம்பனை சீராவலை சவாரித்திடலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டியினை நடத்தி இருந்தனர். (படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

# நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது குருநகர் பாடும்மீன்



யாழ்.லீக்கின் 75 ஆவது ஆண்டையொட்டி நடத்தப்பட்ட யாழ். லீக்கின் ஏ பிரிவு கழகங்களுக் கிடையிலான உதைபந்தாட்டக் கொண்டாட்டம் பெரும்விழாவாக நடைபெற்றது.

அந்த வகையில் இறுதிப் போட்டி துரையப்பா விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இருபெரும் அணிகளான குருநகர் பாடும் மீன் எதிர் நாவாந்துறை சென் மேரிஸ் அணிகள் மோதின. பரபரப்பாக இவ்வாட்டம் தொடக்கம் முதல் இரு பகுதியினரும் ஒன்றையொன்று சளைத்தவர்கள் அல்லவென்று மோதினர். இருந்த போதிலும் சாந்தன், கெயின்சின் அபார கோல்களின் உதவியுடன் 2:0 என்ற கோல்கணக்கில் பாடும்மீன் அணியினர் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கி சாதனை படைத்துக் கொண்டனர்.

இந் நிகழ்வுக்கு இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுரா டி சில்வாவும் பொதுச் செயலாளர் ஜஸ்வர் உமாரும் உதைபந்தாட்ட யாழ். லீக்கின் முன்னாள் தலைவர் சூ.அன்ரனிப்பிள்ளை கிளிபட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாநகர முதல்வர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

"வடக்கின் இரு துருவங்கள் மோதிய உதைபந்தாட்ட சமரில் வெற்றி பெற்று குருநகர் பாடும்மீன் அணி யாழ்.லீக்கின் சம்பி யன் பட்டத்தை வென்றது. (க-106)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய விளையாட்டுக்கழகத்தின் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் விளையாட்டுப் போட்டி.

வடபிராந்திய எல்லைக்குட்பட்ட அரச நிறுவனங்கள் மாத்திரம் பங்கு கொள்ளும் இப் போட்டிகள் வரிசையில் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம் (செற்றப்) ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. பங்குபற்ற விரும்பும் அரச நிறுவன விளையாட்டுக் கழகங் கள் எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன்பு தலைவர் செய லாளர், இபோ.ச. வட பிராந்திய விளையாட்டுக் கழகம், கோண்டாவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு 077 744 4061 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## வயதாகிவிட்டதா? எனக்கா? காட்டுக்காட்டிய டோனி

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி அசத்தல் வெற்றி

ராஜஸ்தான் அணிக்கு எதிரான இன்றைய ஐ.பி.எல்.போட்டியில் சென்னை அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரின் 12 ஆவது லீக் போட்டி சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ராயல் இடையே நேற்று முன்தினம் நடைபெற்றது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் ராஜஸ்தான் அணி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் பந்துவீச தீர்மானித்தது.

முதலில் களமிறங்கிய சென்னை அணியில் தொடக்கத்திலேயே அமபத்தி ராயுடு ஒரு ஓட்டத்துடன் (8) வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வாட்சன் 13 (13) வெளியேற, பின்னர் வந்த கேதர் ஜாதவ் 8 ஓட்டங்களிலேயே நடையை கட்டினார்.

இதனால் 27 ஓட்டங்களில் 3 விக்கெட்டுகளை இழந்த சென்னை அணி தடுமாறியது. அதன்பின்னர் ஜோடி சேர்ந்த ரெய்னா மற்றும் அணித் தலைவர் டோனி அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

36 ஓட்டங்களில் ரெய்னா வெளியேற, அதன்பின்னர் வந்த பிராவோ அதிரடியை வெளிப்படுத்தினார்.

இதற்கிடையே டோனி அரை சதம் அடித்து அரங்கத்தை அதிரச் செய்தார். 27 ஓட்டங்களில் பிராவோ விக்கெட்டை இழந்தார். ஆனால் இறுதி வரை ஆட்டமிழக்காமல் விளையாடி டோனி, கடைசி ஓவரில் சிக்ஸர் மழை பொழிந்தார்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 5 விக்கெட் இழப்பிற்கு 175 ஓட்டங்கள் குவித்தது. டோனி 46 பந்துகளில் 75 ஓட்டங்கள் குவித்தார்.



ஜடேஜா 3 பந்தில் ஒரு சிக்ஸர் உட்பட 8 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ராஜஸ்தான் ராயல் அணி சார்பில் ஜோஃப்ரா ஆர்ஜெர் 2 விக்கெட்டுகளை கைப்பற்றி னர். 176 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணியின் சார்பில் அணித்தலைவர் ரஹானே, ஜோஸ் பட்லர் ஆகியோர் முதலாவதாக களமிறங்கினர்.

அதில் ரஹானே ஓட்டமெதுவும் எடுக்காமல் வெளியேற, அடுத்ததாக களமிறங்கிய சஞ்சு சாம்சன் 8, பட்லர் 6, அதிரடி காட்டிய ராகுல் திரிபாதி 39, ஓரளவு நிலைத்து ஆடிய ஸ்டீவன் ஸ்மித் 28, கௌதம் 9 ஓட்டங்களும் எடுத்து வெளியேறினர். இறுதியில் அதிரடியாக ஓட்டங்கள் சேர்த்த பென் ஸ்டோக்ஸ் 46 ஓட்டங்களில் கேட்ச் ஆனார். அடுத்து களமிறங்கிய கோபால் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். ஆர்சர் 24 , உனத்கட் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. சென்னை அணியின் சார்பில் அதிகபட்சமாக தாகூர், தாஹிர், சாஹர், பிராவோ ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதன்மூலம் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி த்ரில் வெற்றி பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 769 கிலோ கொக்கெய்ன் போதை...

முற்பகல் களனி மகுருவெலயில் உள்ள சுரவீர களஞ்சியத் தொகுதியில் இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் தலைமையில் சர்வதேச நியமங்களுக்கேற்ப இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினதும் கல்கிசை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியினதும் முழுமையான மேற்பார்வையின் கீழ் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம், அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபை மற்றும் இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வை நேரடியாக பொது மக்கள் பார்ப்பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

உரிய பரிசோதனைகளுக்குப் பின்னர் போதைப்பொருட்கள், இரசாயன பதார்த்தங்கள் அடங்கிய கொள்கலன்களில் இட்டு கரைத்து அழிக்கப்பட்டதுடன், அவ்வாறு இரசாயன திரவத்தில் கரைக்கப்பட்ட போதைப்பொருள் கொள்கலன் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றைய தினம் புத்தளத்தில் உள்ள சீமெந்து கூட்டுத்தாபன வளாகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அதிக வெப்பம் கொண்ட உளைகளில் இட்டு ஆவியாக்கப்பட்டது.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களுக்கு என்ன நடக்கின்றது என்று மக்கள் மத்தியில் இருந்து வந்த பிரச்சினைக்கு தீர்வாகவே ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் பகிரங்கமாக அழிக்கப்பட்ட போதைப்பொருட்கள், இந்நாட்டில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களாகும் என்பதுடன், 2016ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21ஆம் திகதி ஒருகொடவத்தையில் கண்டுபிடிக்கப்பட்ட 301 கிலோ 235 கிராம், 2016ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி களனி பெத்தியாகொட பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 31 கிலோ 844 கிராம் கொக்கெயினும் 2016ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதி ஒருகொடவத்தை சுங்க கொள்கலன் தளத்தில்கைப்பற்றப்பட்ட கொக்கெயின் 219 கிலோ 950 கிராம் மற்றும் 2018 ஜூன் 19ஆம் திகதி ரத்மலானை பொருளாதார மத்திய நிலையத்தில் கைப்பற்றப்பட்ட 216 கிலோ 435 கிராம் கொக்கெயின் ஆகியவையே இவ்வாறு அழிக்கப்பட்டன.

இந்த நிகழ்வை பார்வையிட்டதன் பின்னர் கருத்து தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டவிரோத போதைப் பொருள் கடத்தலை முற்றாக ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் படுவதாக தெரிவித்தார்.

நாட்டுக்கு கொண்டுவரப்படும் சட்டவிரோத போதைப்பொருட்களை கண்டறிவதற்கு உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழிநுட்ப உபகரணங்களை அடுத்த மாதம் இலங்கைக்கு கொண்டு வர தான் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரணதண்டனை வழங்குவதும் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அமைச்சர் தலதா அத்துகோரல, இராஜாங்க அமைச்சர்கள் அஜித் மான்னப்பெரும, ரஞ்சன் ராமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, சத்துர சேனாரத்ன, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோரும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பின் முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-3)

## உஷ்ணமான...

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட மேல் மாகாணம் மற்றும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலேயே இன்று செவ்வாய்க்கிழமை இவ்வாறு உஷ்ணமான காலநிலை நிலவக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதன்காரணமாக பொது மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது.

உஷ்ணமான காலநிலை நிலவும் சந்தரப்பங்களில் நிழலான இடங்களில் நடமாடுமாறும் அதிக நீர் பருகுமாறும் அந்த திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் வவுனியாவில் 38.1 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளது. (ம-3)

## அரச ஊழியர்களு...

இந்த வருடத்திற்கான வரவு-செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதம் நேற்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கான ஒதுக்கீடு தோற்கடிக்கப்பட்ட நிலையில், அரச ஊழியர்களுக்கான சம்பளத்தினை வழங்க முடியாமல் போனதாக கூறப்பட்டமை உண்மைக்கு புறம்பானது.

இந்த ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தில் அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகள் ஏப்ரல் மாதம் 30ம் திகதி வரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அரச பணியாளர்களுக்கான சம்பளத்தினை வழங்குவதில் சிக்கல் இருக்காது என தெரிவித்துள்ளார். (ம-3)

## கிளிநொச்சி...

வடக்கு கிழக்கு துரித அபிவிருத்தி செயலணியின் கூட்டம் நேற்று பிரதமர் தலைமையில் நாடாளுமன்ற கட்டட தொகுதியில் இடம்பெற்றது.

நேற்றைய சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட சிறிதுநேரமே கலந்து கொண்டிருந்தார். பின்னர் காமினி திசாநாயக்கவின் பாரியாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்றுவிட்டார். பின்னர் அதிகாரிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு துரித அபிவிருத்தி செயலணியில் அங்கம் வகிக்கும் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சீ.யோகேஸ்வரன், கோடீஸ்வரன், குகதாசன், செல்வின் ஆகியோருடன் குழுவில் அங்கம் வகிக்காத திருகோணமலை நியமன எம்.பி துரைரட்ணசிங்கமும் கலந்து கொண்டிருந்தனர்.

கம்பெரலிய திட்டங்கள் குறித்து முதலில் ஆராயப்பட்டது. பின்னர், ஐ ரோட்ட திட்டம் பற்றி ஆராயப்பட்டது. ஐரோட் திட்டம் விளையாட்டுத்தனமாகவே இருப்பதாக எம்.பிக்கள் குறிப்பிட்டனர். மே அல்லது ஜூன் ஆரம்பிக்குமென ரணில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம்- மானிப்பாய் - காரைநகர் வீதியையும், பருத்தித்துறை, கொடிகாமம் வீதியையும் உடனடியாக புனரமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, பலாலி விமான நிலையத்திற்கு மேலும் காணி சுவீகரிக்கப்பட வேண்டுமென அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். தற்போது 1350 மீற்றர் ஓடுபாதையே உள்ளது, அதை 3 கிலோமீற்றர் ஆக விஸ்தரிக்க வேண்டும், மேலும் காணிகள் சுவீகரிக்க வேண்டும் என்றார்கள். மாவை சேனாதிராசா அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். முதலில் மக்களை குடியமர்த்திவிட்டு, பின்னர் விமானநிலையத்தை விஸ்தரிக்கலாம் என்றார். எனினும், அபிவிருத்திக்காக முதலில் காணியை சுவீகரிப்பது நல்லதென சுமந்திரன் தெரிவித்தார். அதில் முடிவெதுவும் எட்டப்படவில்லை. இதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க சென்றுவிட்டார். பின்னர், அதிகாரிகளும், கூட்டமைப்பினரும் கலந்துரையாடல் நடத்தினார்கள்.

நேற்றைய கூட்ட நிகழ்ச்சி நிரல் சம்பந்தன், மாவை, சுமந்திரன் ஆகிய மூவருக்கும் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. ஏனைய எம்.பிக்களிற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனை சிறிதரன் எம்.பி சுட்டிக்காட்டினார். எனினும், அவருக்கு திருப்தியான பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கு துரித அபிவிருத்தி செயலணியென்ற பெயரில் நேற்று கூட்டம் கூடினாலும், யாழ்ப்பாணத்திற்குள்ளான அபிவிருத்திகள் பற்றியே கலந்துரையாடப்பட்டுக் கொண்டிருந்தது. சம்பந்தன், மாவை, சுமந்திரன், சித்தார்த்தன் ஆகியோர் மட்டுமே பேசிக் கொண்டிருந்தனர். இதை மௌனமாக அவதானித் துக் கொண்டிருந்த சிறீதரன் எம்.பி, ஒரு கட்டத்தில் பொறுக்க முடியா மல் வெடித்து எழும்பினார். இது வடக்குக் கிழக்கு அபிவிருத்தி செயலணியா? அல்லது யாழ்ப்பாண அபிவிருத்தி செயலணியா? கிளிநொச்சி குறிஞ்சாத்தீவு உப்பளம், பரந்தன் கைத்தொழில் பேட்டை பற்றி 3 வருடமாக பேசிக் கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி யாரும் கவனம் செலுத்தவில்லை. இந்த கூட்டம் ஒரு திட்டமிட்டபடி நடப்பதில்லை. நிகழ்சி நிரல் எம்.பிக்களிற்கு வழங்கப்படவில்லை. இரண்டு மூன்று பேர்தான் நிகழ்ச்சி நிரலை வைத்து கதைத்துக் கொண்டிருப்பதெனில், எங்களையெல்லாம் எதற்கு அழைக்கிறீர்கள்? என காரசாரமாக பேசிவிட்டு கூட்டத்திலிருந்து வெளியேறினார். (ம-3)

## தலையில் ஏற்...

திங்கட்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.

மன்னார் தட்சணாமருதமடு பாலம்பிட்டியைச் சேர்ந்த கைலாசபிள்ளை ஹேமா (வயது-28) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் எதிர்வரும் 10ஆம் திகதி திருமண பந்தத்தில் இணையவிருந்தார். அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தில் கல்வி பயின்று கடந்த வருடம் (2018) செப்டெம்பர் மாதம் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சித்திரவதையை...

இன்றைய தினம் ஆரம்பிக்கிறது.

இலங்கையில் பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் சித்திரவதைகளில் இருந்து பாதுகாப்பு பெறும் நிலைமை உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்த குழு இலங்கை வருகிறது. (ம-3)

## ஜெனிவா தீர்...

பாரபட்சத்துக்கு எதிரான பிரிவின் பிரதானி மோனா சிஷ்மாவி கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர், 2015ஆம் ஆண்டு மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு, இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கப்படும்.

இலங்கையின் நீதித்துறைக்கு அமைய சில விடயங்களுக்கு தடை நிலவுவதாகவும் எனவே 30/1 பிரேரணையின் பரிந்துரையில் வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதனை இலங்கை மறுக்குமாக இருந்தால் அதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதை குறிப்பிட வேண்டும்.

நீதிபதிகளின் தேசியம் குறித்து அவதானம் செலுத்துவது முக்கியமில்லை, பொறுப்புக்கூறல் விடயத்தை எவ்வாறு தடைநீக்கி முன்னெடுக்க முடியும் என்பது குறித்த அவதானமே முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## வரவு - செலவுத் திட்டத்தை...

கூட்டு நடவடிக்கையை மக்களும் நாமும் ஏற்றுக்கொண்டதாக இல்லை.

இந்த நிலையில் 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை ஐ.தே.க. அரசு முன்வைத்து மூன்று வாக்கெடுப்பில் ஒன்று தோல்வி கண்டுள்ளது.

கட்சி என்ற உணர்வுடன் செயற்படாது ஐ.தே.க. உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு சமுகம் தராததால் வாக்கெடுப்பில் தோல்வி கண்டனர்.

அதேநேரத்தில் ஊழல்களைக் கொண்டு செயற்படும் ஐ.தே.க. அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தின் முதல் வாக்கெடுப்பின்போது ஜனாதிபதி தரப்பில் 20 உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தராததால் வெற்றி பெற்றனர். இது ஒரு நாடகமாகவும் இருக்கலாம்.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணி வரவு - செலவுத்திட்டத்தை தோல்வியடையச் செய்ய எதிர்த்தே வாக்களிக்கும் இதில் மாற்றமில்லை.

இருந்த போதிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான முக்கிய வாக்கெடுப்பு தோல்வி கண்டுள்ளது. இதனால் உள்ளூராட்சி சபைகள் அதன் உத்தியோகஸ்தர்கள் மற்றும் சபைகளின் நடவடிக்கைகளுக்கு சில பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## வட மாகாணத்தின் தற்போதைய...

வட மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தினார். யுத்தம் முடிவடைந்து 10 ஆண்டுகள் கடந்தும் வட மாகாணத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலையில் பாரியதொரு மாற்றம் இன்னும் ஏற்படாமல் அவர்கள் இன்றும் கடினமான சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய அடிப்படையிலான வழிமுறைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருவதாக ஆளுநர் பிரான்ஸ் தூதுவருக்கு தெரிவித்ததுடன், இந்த மாற்றத்தை ஏற்படுத்த பிரான்ஸ் அரசினால் மேற்கொள்ளக் கூடிய உதவிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர்ப்பிரச்சனை காணப்படுவதுடன் அதனை நிவர்த்தி செய்வதற்கு சாத்தியமான வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் இந்த நீர்ப்பிரச்சனையை தீர்ப்பதற்கு தற்போது 4 பிரதான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதை குறிப்பிட்ட ஆளுநர், இவற்றிற்கு பிரான்ஸ் நாட்டினால் வழங்கக்கூடிய உதவிகள் மற்றும் திட்டங்கள் குறித்து ஆராயுமாறு பிரான்ஸ் தூதுவரிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும், வடமாகாண இளைஞர்கள் மத்தியில் சமூக கலந்துரையாடல்களை ஏற்படுத்தக்கூடிய திரைப்படங்களின் திரையிடல்களை ஒழுங்கு செய்யுமாறு ஆளுநர் பிரான்ஸ் தூதுவரிடம் இந்த சந்திப்பின்போது கேட்டுக் கொண்டார்.

ஆளுநருடனான இந்த சந்திப்பு மிகுந்த ஆக்கபூர்வமாக அமைந்திருந்தமையை சுட்டிக்காட்டிய பிரான்ஸ் தூதுவர், பிரான்ஸ் நாட்டினால் வட மாகாணத்தில் மேற்கொள்ளக் கூடிய உதவிகள் திட்டங்கள் குறித்து ஆராய்வதாகவும் இதன்போது தெரிவித்தார். (ம-3)

கொவிசெத
திகதி 2019.04.01
சீட்டிழுப்பு இலக்கம் 2081
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 08 33 46 50
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/04/01
சீட்டிழுப்பு இலக்கம் 3888
ஆங்கில எழுத்து T
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 4 0 0 6 7

மெகா பவர்
திகதி 2019/04/01
சீட்டிழுப்பு இலக்கம் 364
E 06
வெற்றி இலக்கங்கள் 07 44 54 76

சுபிரி வாசனா
திகதி 2019/04/01
சீட்டிழுப்பு இலக்கம் 1417
எழுத்து 07
வெற்றி இலக்கம் 26 36 45 57 25 20
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி, அல்வாய்.

**A/L 2021**
கலை வர்த்தகப் பிரிவு
வகுப்புக்கள் ஆரம்பம்
03.04.2019 புதன்
மாலை 3.00 மணி
**0773095176, 0212263206**
(C-5945)

## வேலைக்கு ஆள் தேவை
(வீடியோ எடிட்டர்)
ஒரு வருட முன் அனுபவம் உள்ளவர்க்கு முன்னுரிமை (Multimedia) (Graphic Design) படித்தவர்கள், பழக விரும்பு வோரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
077 621 6741, 075 227 8354
யாழ்ப்பாணம். (8314)

## கணனி திருத்தம்
மிகக்குறைந்த சேவைக்கட்டணத்தில் உங்களின் கணனி, மடிக்கணனி என்பவற்றை எங்களிடம் திருத்திக் கொள்ளுங்கள். (8308)
சேவைக்கட்டணம் - 400/= முதல்
தொடர்புகளுக்கு : 077 078 8877

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி, அல்வாய்.

**O/L** மீட்டல் வகுப்புக்கள்
03.04.2019 புதன்கிழமை காலை
7.30 மணிக்கு ஆரம்பம்.
**அனுமதி இன்று முதல்**
**0773095176, 0212263206**
(C-5945)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்ச் DELF A1
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம்
0779 789 456
021 221 7781
ஆரம்பம் : 06.04.2019 சனி மதியம் 12 மணி.
ஏனைய நிறுவனங்களில் கற்றோரும் இணையலாம். (C-5930)

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK- 550 | /=Kg |
| கனடா-900 | /=Kg |
| ஜேர்மனி-700 | /=Kg |
| நெதர்லாந்து-700 | /=Kg |

(C-6917)
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## BCHS
# British college of higher studies
**English/ Sinhala/ Computing**
- Certificate course in English
- Diploma in English
- Spoken English
- IELTS (Academic/General)
- IELTS Life skills (A1, B1 exams)
- Spoken Sinhala with grammar
- Computer hardware & net working
- Multimedia (Audio & Video editing)
- Internet & Emails
- Microsoft package
- Fundamentals of ICT

புதிய பிரிவுகள் ஆரம்பம்...
பதிவுகள் இன்று முதல்...

15, Stanley Road, Sirambiyady lane, Jaffna.
(லங்கா சதொச மேல் மாடி)
021 222 4550 / 076 138 0212
(C-5956)

## வேலைவாய்ப்பு
எமது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் யாழ் புதிய கிளைகளுக்கு முகாமைத்துவத் துறையில் பயிற்சிக்கான நேர்முகத் தேர்வு ஆரம்பமாகவுள்ளது. (தகுதி O/L) 90 நாட்கள் பயிற்சியின் பின்பு சர்வதேச ரீதியாக வணிகத்துறையில் இணைந்த எமது நிறுவனத்திலே நிரந்தரமான பதவிகளும் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் தங்குமிடவசதி, பயிற்சியின் போது 15,000/= - 25,000/= வரை பெற்றுக்கொள்ள முடியும். பயிற்சியின் பின் மாதம் ஒன்றிற்கு 45,000/= ற்கு அதிகமான கொடுப்பனவும் வேறு சலுகைகளும் உண்டு. **தொடர்புகளுக்கு :- 077 123 7797**

## புதிய நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

**O/L DAY CLASS**
(பகல் நேர வகுப்பு)
ஆரம்பம்: 03.04.2019
Wednesday - 8.00am
**077 459 8440**
(C-5984)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
# af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (8318)

# புதுவருட சலுகைகள்
NEW NEW YEAR COLLECTIONS
NEW YEAR SPECIAL DISCOUNT
COMMERCIAL BANK

*25 % for Credit Cards* | *10 % for Debit Cards*
7th 8th 9th ONLY

**APRIL 1ST TO 30TH GIFT VOUCHERS**

conditions apply

SAREE-• SHALWAR • KURUTIS • COUPLE T SHIRTS • T SHIRTS • SHIRTS • JEANS

He & She FASHIONS
# 309, Kasthuriyar road, Jaffna.
He & She fashions 0778554840

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
திருமண பட்டுப் புடவைகளின் பூங்காவனம்
# இந்தியன் செலக்ஷனின்
**சித்திரைப் புத்தாண்டு விசேட தள்ளுபடி....**



கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துனிகள், பட்டுச்சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T-சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் பல புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்.

**இம்முறை சித்திரைப் புத்தாண்டை இந்தியன் செலக்ஷனுடன் குதூகலமாகக் கொண்டாடுங்கள்.**

| | | |
|---|---|---|
| பட்டுச்சாறி | - 15000/- | 7500/- |
| கொட்டன் சாறி | - 1800/- | 1000/- |
| கொட்டன் (Top) | - 1500/- | 1000/- |
| டெனிம் (Top) | - 1500/- | 1000/- |
| பார்ட்டி புறொக் (பெரியது) | - 5000/- | 3500/- |
| பார்ட்டி புறொக் (சிறியது) | - 3500/- | 2500/- |
| கொட்டுன் சல்வார் | - 5000/- | 2000/- |
| நெற் சல்வார் (பெரியது) | - 5000/- | 2000/- |
| நெற் சல்வார் (சிறியது) | - 3500/- | 1000/- |

*புத்தம் புதிய டிசைன்கள்*
*விசேட விலைக்கழிவுகள்*

**காலம் : 23.03.2019 - 14.04.2019**
**இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(C-5950)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.